விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 19 சனிக்கிழமை (02.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



எவர் கைக்கு மாறும் இந்த வெற்றிக்கிண்ணம்...! இன்று பலப்பரீட்சை.

## இலங்கை அணிக்காக திருப்பதியில் ஜனாதிபதி வழிபாடு

(சென்னை)

மும்பையில் நடைபெறவுள்ள இலங்கை-இந்திய அணிகளுக் கிடையிலான உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை அணி வெற்றியடைவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ திருப்பதி வெங்கடடேஸ்வர கோவிலில் வழிபாட்டில் ஈடு படவுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை இரவு அல்லது இன்று சனிக்கிழமை அதிகாலை திருப்பதி வெங்கடேஸ் வர கோவிலுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபடவுள்ளதாக ஆலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெங்கடேஸ்வர கோவிலில் ஜனாதிபதி மத வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கிரிக்கெட் போட்டியை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மும்பைக்கு விமான மூலம் செல்லவுள்ளதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

திருப்பதியிலிருந்து 15 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ரேனிகுண்டா விமான நிலையத்தில் விசேட விமானம் மூலம் ஜனாதிபதி செல்லவுள்ளார். (ச-5)

# புலிகளின் ஆயுதப்பரம்பலை சர்வதேசம் கட்டுப்படுத்தியது

## த ஹிந்து தகவல் வெளியீடு

(சென்னை)

சமாதான உடன்படிக்கை மீறப்பட்டு ஏறத்தாழ யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் அமெரிக்காவுடன் இலங்கை கூட்டிணைந்து விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பு மற்றும் ஆயுதக்கொள்வனவுகளை இடைநிறுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது என த ஹிந்து பத்திரிகையின் ஊடாக விக்கிலீக்ஸ் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பு

பெற்றோல் மற்றும் டீசலின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. ஒரு லீற்றர் 90 ஒக்டேன் பெற்றோலின் விலை 10 ரூபாயினாலும் டீசலின் விலை 3 ரூபாயினாலும் அதிகரிக்கப்படும். இதன்படி ஒரு லீட்டர் பெற்றோலின் விலை 125 ரூபாயாகவும் டீசலின் விலை 76 ரூபாயாகவும் இருக்கும். (ச-5)

## லிபியாவுக்கு ஆதரவாக தொடரும் போராட்டம்

லிபியா மீது மேற்குலக நாடுகள் மேற்கொண்டு வரும் தாக்குதல் சம்பவங்களுக்கு எதிராக லிபியாவின் நேச நாடான இலங்கையில் ஆர்ப் (20ஆம் பக்கம் பார்க்க)

## சாவ.வாரிவானேஸ்வரர் ஆலயத்தில் பன்னிரண்டு இந்து விக்கிரகங்கள் மீட்பு

### பேரா.புஷ்பரட்ணம் தகவல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் ஆலயக் திருக்குளத்திலிருந்து பன்னிரண்டு இந்து விக்கிரகங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளதாவது,

சாவகச்சேரி நீதிமன்ற வளவில் புராதன ஆலயத்திற்குரிய கட்டிட அழிபாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்து அவ் ஆலயம் பற்றிய பல தகவல்கள் அவ் ஊர் மக்களால் தினமும் வழங்கப்பட்டு வருகின்றன.

அவற்றுள் தற்போதைய வாரிவானேஸ்வரர் ஆலய முகாமையாளரால் தரப்பட்ட தகவல்கள் எமது ஆய்வை மேலும் முன்னெடுத்துச் செல்ல தூண்டுதலாக உள்ளன. அவரது தகவல்களின்படி நகரத்திலுள்ள நீதிமன்றம், சந்தை மற்றும் அதன் சுற்றாடல்களில் கிடைத்த விக்கிரகங்களே ஆரம்ப காலங்களில் தற்போதைய வாரிவானேஸ்வரர் ஆலயத்தில் வைத்து வழிபடப்பட்டதாகவும், அவற்றில் ஏற்பட்ட சிதைவுகள் (20ஆம் பக்கம் பார்க்க)


## யுத்த வெற்றி போன்றது உலகக்கிண்ண வெற்றி!

### பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெறும் என தான் நம்புவதாகவும் அவ் வெற்றி யுத்தத்தில் பெற்ற வெற்றியை போன்றாகும் எனவும் முன்னாள் இராணுவத்தளபதியும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

தற்போதைய சமூக அரசியல் பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இலங்கை அணியினர் உலகக்கிண்ணத்தை வெல்ல



வேண்டுமென நாம் வாழ்த்துகிறோம் என பொன்சேகா (20ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இல. 526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-2797)



## ஈழத்தமிழர் பிரச்சினையை முன்வைத்து தமிழகத்தில் ஜெயலலிதா வெற்றிபெறுவார்

(கொழும்பு)

இலங்கை தமிழர் விடயத்தின் அடிப்படையில் தமிழ் நாடு சட்டப் பேரவை தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அனைத்து இந்திய அண்ணா திராவிட கழகத்தின் கூட்டணி அமோக வெற்றிபெறும் என புதிய கருத்து கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியா ருடே, ஹெட்லைன்ஸ் ருடே மெயில் ஆகிய பத்திரிகைகள் நடத்திய கருத்துக் (20ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் 206 பேர் விடுதலை

(வவுனியா)

வவுனியாவிலுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 206 பேர் நேற்று வெள்ளிக்கிழமை பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவுனியா (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# சமாந்தரமாக சென்ற 18 பேர் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்ற 18 பேர் நேற்று யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபாய் வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

கடந்த சில மாதங்களாக இவ்வாறு சைக்கிள்களில் சமாந்தரமாக செல்பவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

## நாட்பாடசாலை வகுப்பு இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா மற்றும் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறிகளைத் கற்கும் மாணவர்களுக்கு இன்று நடைபெறவுள்ள நாட்பாடசாலை வகுப்புக்கள் யாவும் பாடசாலைத் தவணைப்பரீட்சைகள் காரணமாக இன்று நடைபெறமாட்டது.

மேலும் பட்டமேற்கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான செயற்பாட்டு நாட் பாடசாலை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் பட்டமேற்கல்வி டிப்ளோமாவை கற்கும் அனைத்து மாணவர்களையும் இச்செயற்பாட்டு நாட்பாடசாலையில் தவறாது கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## சிறுவர் இல்லத்திலிருந்து இடமாற்றம் செய்யவிருந்த 26 சிறுவர்கள் மயக்கமடைந்தனர்

உதய கதிர்காமம் கடவுளின் குழந்தைகள் சிறுவர் பராமரிப்பு இல்லத்திலிருந்து நேற்று 26 குழந்தைகள் வதிரி ஸ்ரீ பரந்தாம ஆச்சிரமத்திற்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் நிலவிவந்த இடப்பற்றாக்குறை காரணமாக சிறு வர்களை வேறு சிறுவர் இல்லங்களுக்கு இடமாற்ற வேண்டும் என பருத்தித்துறை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

நீதிபதியின் உத்தரவின் பேரில் சிறுவர்களை இடமாற்றச் சென்ற யாழ். மாவட்ட நன்னடத்தை குழுவினருடன் செல்ல மறுத்த சிறுவர்கள் அழுது மயக்கமடைந்துள்ளனர்.

இதில் மயக்கமடைந்த 21 பெண்பிள்ளைகள் நேற்று மாலை 4.30மணியளவில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

தாம் இதுவரை காலமும் வாழ்ந்த சிறுவர் இல்லத்தைவிட்டு பிரியவிரும்பாது அழுது மயக் கமடைந்த சிறுவர்களை நீதிபதி ஸ்ரீநிதி நந்த சேகரம் வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டுள்ளார். மேற்படி சிறுவர்களின் 5சகோதரர்கள் உள்ளடங்கலாக 26பேர் இடமாற்றப்பட்டுள்ளனர். (எ-6,19,24)

## மீள்குடியேறிய மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)


தெல்லிப்பழை வித்தகபுரம் ஜே.223 இல் மீள்குடியேறிய மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதில் மலசலகூடங்களுக்கு தேவையான பொருட்களும், 25சீமெந்து பைக்கற்றுகளையும் தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம் வழங்கியுள்ளார்.

இது தவிர இன்ரரக் கிளப்பினால் 100 குடும்பங்களுக்கு தேவையான தகரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பொருட்களை மக்களிடம் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் காலை 10 மணிக்கு பண்ணாலை சேர்.கனகசபை வித்தியாலயத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் புதிய முகாமையாளர் நேற்று பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பிரதம முகாமையாளராக கந்த சாமி கேதீசன் நேற்று பொறுப் பேற்றுள்ளார்.

பிரதம முகாமையாளராகவிருந்த க.கணேச பிள்ளை பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து அவரது இடத்துக்கு கேதீசன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கைப்போக்குவரத்து சபையில்இவர் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதம பிராந்திய முகாமையாளராக பதவியேற்ற பின் பத்திரிகையாளர்களை சந்தித்து கலந்துரையாடிய அவர் தன்னை இந்த பதவிக்கு தெரிவு செய்தவர்களுக்கும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இலங்கைப் போக்குவரத்து சபையின் வளர்ச்சிக்காக தாம் பாடுபட போவதாகவும் அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு வட பிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, மன்னார், வவுனியா ஆகிய பிராந்தியங்களில் உள்ள இலங்கைப் போக்குவரத்து சபைகள் இணைந்து லீசிங் முறையில் தலா இரண்டு பேருந்துகளை கொள்வனவு செய்யவுள்ளோம்.

இதன் மூலம் வருமானத்தை பெருமளவில் அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

## செயற்கை அவயவம் பெற்றுக் கொள்ள பதியலாம்

(கிளிநொச்சி)

யுத்தத்தின் போது அல்லது விபத்தின்போது கால், கை துண்டிக்கப்பட்டவர்களுக்கான செயற்கை அவயவம் பொருத்தப்படவுள்ளது. தேவையான நபர்கள் பெயர் விபரத்தினை மிகவிரைவாக கிளிநொச்சி இயன் மருத்துவ அலகில் பதிவு செய்யுமாறு கிளிநொச்சி பொது வைத்திய நிபுணர் அறிவித்துள்ளார்.

முன்னுரிமை அடிப்படையில் 35பேருக்கு இவ் அவயவம் வழங்கப்படவுள்ளது. (ச)

## விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி தெரிவுப்பரீட்சை இசுறுபாயவில்!

வட மாகாண கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படும் தரம் 6, 7 மாணவர்களுக்கான விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி -2011 நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்வி அமைச்சின் இசுறுபாய கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வடமாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேரடியாகப் பாடசாலைக்கு கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப் போட்டி பரீட்சைக்கு தேசியமட்டத்தில் தெரிவானமாணவர்களின்பெயர்விபரம்வருமாறு,

பரமாணந்தன் கஸ்தூரி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ராஜசேகரன் தாக்சா யினி (யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), ஸ்ரீகாந் தராஜா அபி ராமி (வ/இறம் பைக் குளம் ம.வி), நீலலோகன் தவபாலசுந்தரம் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி), முருகையா பிருந் தாபன் (யா/இடைக்காடு ம.வி), பாலச் சந்திரன் அபியுக்தன் (வ/வவுனியா தமிழ் ம.வி), இ.ஆர்.எஸ்.பானுஜன் மிராண்டா (மன்/புனித சவேரியர் ம.வி), ஜெனிஸ் பிகரடோ யூட் மிதுஷன் (மன்/புனித சவேரியர் ம.வி), காந்தரூபன் யுகேஸ் (மன்/சித்திவிநாயகர் வித்தியாலயம்), தியோயினாஸ் கிலாரி அன்ரனைனஸ் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி), இளங்கோ இளங்கீதன் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), அருளானந்தம் அபிநந்தன் (யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி). (எ-2)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம் 1979ஆம் ஆண்டு பிறந்த மிருகசீரிடம் நட்சத்திரம் 3ம் பாதம் உதயச் செவ்வாய், 14 பாவக்கிரகம் கொண்ட மணமகனுக்கு படித்த அழகிய மணமகள்தேவை.
தொடர்புக்கு: 0771874409
0779233681
(4255)

**கணினி திருத்தம்**

உங்களது கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள்
0771329513
Computer Repair
(4284)

**Diploma in Mobile Phone Servicing & Repairing Course**




Job Oriented Vocational Training
DCS
Software & Hardware Theory
Hardware Practicals,
Software Practicals



தமிழ்மொழி விளக்கங்களுடன்
Duration : 2 Months
அனைத்து வகையான Phoneகளையும் திருத்தும் பயிற்சி
FREE
Course Material & Software CD
ASIAN COMPUTERS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021-222-5677
(சி-285)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

நிகழும் விகிர்தி வருடம் மாசி மாதம் 22ஆம் நாள் (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்



**அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

**அந்தியேட்டிக் கிரியைகள்:**- 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும்

**வீட்டுக்கிருத்திய கிரியைகள்:**- எதிர்வரும் 05.04.2011 செவ்வாய்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும்

நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.11, வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(4283)

# உலக மகா யுத்தம்

# இலங்கை-இந்திய அணிகள் மும்பையில் இன்று பலப்பரீட்சை

(மும்பை)

உலகக் கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இன்று இலங்கை-இந்திய அணிகள் மோதுகின்றன.

இரு அணிகளின் தலைவர்களும் விக்கெட் காப்பாளராக உள்ளமை விஷேட அம்சம். ஓட்டங்கள் சாதனையில் சச்சின் டெண்டுல்கர், விக்கெட் வீழ்த்தும் சாதனையில் முரளிதரன் என இரு அணிகளிலும் நம்பிக்கை நட்சத்திரங்கள் களமிறங்குகின்றனர்.


பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறுகிறது. இதில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட முன்னணி அணிகள் காலிறுதியுடன் வெளியேறினர். அரையிறுதியில் இலங்கை அணி நியூசிலாந்தையும், இந்திய அணி பாகிஸ்தானையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

மும்பை வான்கடே மைதானத்தில் இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் இலங்கை அணி, இந்திய அணியை எதிர்கொள்கிறது.

இரு அணிகளும் கடந்த 2 வருடங்களுக்குள் பல ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளதால் எதிரணியின் பலம் பலவீனம் பற்றி நன்கு தெரியும். தவிர ஐ.பி.எல் இருபது-20 தொடரில் விளையாடிய அனுபவம் கை கொடுக்கும்.

### ரன் மெஷின் டில்சான்

இலங்கை அணியின் முதல்வரிசைத் துடுப்பாட்டம் அபாரமாகவுள்ளது. டில்சான் - தரங்க ஜோடி ஆரம்பத்தில் அசத்துகின்றனர். இம்முறை அதிக ஓட்டங்கள் குவித்துள்ளவர்கள் பட்டியலில் டில்சான் 467 ஓட்டங்களை எடுத்து முதலிடத்திலுள்ளார். அணித்தலைவர் குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, சாமரசில்வா போன்றோரும் நல்ல நிலையிலுள்ளனர். சகலதுறை வீரர் அஞ்சலோ மத்யூஸ் நீக்கப்பட்டது நெருக்கடியாக அமையலாம்.



### மலிங்க வேகம்

பந்து வீச்சுத்தான் இலங்கை அணியின் மிகப்பெரிய பலமாகவுள்ளது. வேகப்பந்தில் மிரட்ட மலிங்க காத்திருக்கிறார். இத் தொடரில் ஹட்ரிக் சாதனை படைத்த பெருமை மிக்க லசித் மலிங்க இன்றும் அசத்தலாம்.

அனுபவ வீரர் முரளிதரன் சுழல் ஜாலம் காட்டலாம். இம்முறை 15 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ள அவர் தனது காயத்தை பொருட்படுத்தாது இன்று பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முரளிதரனுடன் ஹேரத், மென்டிஸ் தற்போது ராண்டீவ் என சுழல் படையே காத்திருக்கிறது.

### துடுப்பாட்ட பலம்

இந்திய அணிய்யை பொறுத்தவரை துடுப்பாட்டம்தான் பலம். மிக நீண்ட துடுப்பாட்ட வரிசை இருக்கிறது. டெண்டுல்கர்-சேவாக் அதிரடி ஆரம்பம் வழங்குகின்றனர்.

இதுவரை 2 சதம் அடித்துள்ள சச்சின் டெண்டுல்கர் (464) இம்முறை அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். இன்று தனது பிறந்த மண்ணில், சர்வதேச கிரிக்கெட்டில் 100 ஆவது சதம் காண்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காம்பீர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடுகிறார். ஹோலியின் ஆட்டம் ஏமாற்றமளிக்கிறது.

யுவராஜ் சிங் சகல துறையிலும் ஜொலிக்கிறார் இத் தொடரில் இதுவரை 4 போட்டிகளில் ஆட்ட நாயகன் விருது வென்றுள்ளார். பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணியை கரைசேர்த்த ரெய்னா இன்று அசத்தலாம்.

### சகீர் அபாரம்

இந்திய பந்துவீச்சில் சகீர் கான் நம்பிக்கையளிக்கிறார். முனாப் பட்டேலும் கைகொடுத்தால் வேகப்பந்து வீச்சு பலமாக அமையும். காயம் காரணமாக இப் போட்டியில் நெகரா நீக்கப்பட்ட நிலையில் சுழல்பந்து வீச்சாளர் அஷ்வினுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம்.

இத் தொடருடன் கிரிக்கெட் அரங்கிலிருந்து விடைபெறும் முரளிதரனுக்கு உலகக்கிண்ணம் வென்றுதர சங்கக்கார படை காத்திருக்கிறது.

உலகக்கிண்ண அரங்கில் பல சாதனைகள் படைத்த சச்சின் டெண்டுல்கருக்கு உலகக்கிண்ண பரிசு வழங்க இந்திய அணிய்யினரும் தயாராக இருக்கின்றனர்.

இப்படி ஒரு இலச்சியத்துடன் இரு அணிகளும் களமிறங்குவதால் வெற்றியைக் கணிப்பது கடினம்.

## முரளி விளையாடுவார்; பயிற்றுவிப்பாளர் உறுதி

முத்தையா முரளிதரனின் உடல் திட நிலை குறித்து கவலைகள் நிலவிய போதிலும் இன்று நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் அவர் விளையாடுவார் என இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ட்ரவோர் பெய்லீஸ் தெரிவித்துள்ளார்.

39 வயதான முத்தையா முரளிதரன் உலகக் கிண்ண சுற்றுப்போட்டியின் போது கணுக்கால், முழங்கால், பகுதி என உடலின் பல பகுதிகளில் உபாதைகளுக்குள்ளானார். அரையிறுதிப் போட்டியின் போது முரளிக்கு ஓய்வு வழங்கப்பட வேண்டும் என்ற ஆலோசனை பலரால் முன்வைக்கப்பட்டது. எனினும் அவர் அப்போட்டியில் சிறப்பாக பந்து வீசி இலங்கை அணியின் வெற்றிக்கு உதவினார். ஆனால் அவர் இன்னும் முழுமையாக குணமடைய வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் மும்பை வான் கட அரங்கில் நடைபெற்ற பயிற்சிகளில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள இந்திய அணியுடனான உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் முரளி விளையாடுவார் என அணியின் பயிற்றுநர் பெய்லீஸ் கூறியுள்ளார். முரளி விளையாடுவதற்கு சிறந்த வாய்ப்பு உள்ளது. அவர் அரையிறுதிப் போட்டியில் 10 ஓவர்கள் பந்துவீசினார்.



அப்படியான குணவியல்பு கொண்ட முரளிதரன் அசௌகரியமான நிலையிலும் விளையாடுவார் என அவர் கூறினார்.

இப்போட்டியுடன் முரளிதரன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்யூஸ் விலகல் ராண்டீவ் அணியில்



இலங்கை அணியின் சகல துறை வீரர் அஞ்சலோ மத்யூஸ் இன்று நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுழற்பந்து வீச்சாளர் சுராஜ் ராண்டீவ் 15 பேர் கொண்ட அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் சகல துறை வீரர் அஞ்சலோ மத்யூஸ் ஆகியோர் காயங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் சுழற்பந்து வீச்சாளர் ராண்டீவ் ஆகியோர் ஏற்கனவே மாற்றுவீரர்களாக மும்பைக்கு அழைக்கப்பட்டனர்.

இந்நிலையில் அஞ்சலோ மத்யூஸின் உடல்நிலையில் போதிய முன்னேற்றம் ஏற்படாததை அடுத்து சுழற்பந்து வீச்சாளரான ராண்டீவ் அணியில் சேர்ப்பதற்கு ஐ.சி.சியிடம் இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி கோரியிருந்தது.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு குறைந்த அவகாசமான நிலையில் ராண்டீவை அணியில் சேர்ப்பதற்கு ஐ.சி.சி நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

## 260 – 270 ஓட்டங்கள் குவிக்கலாம்

வான்கடே மைதானமும் முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கே சாதகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆடுகளத்தின் வடிவமைப்பாளர் சுதிர்நாயக் கூறுகையில்,

இம் மைதானத்தில் உலகக் கிண்ண லீக் சுற்றில் நடந்த 2 ஆட்டங்களிலும் நல்ல ஓட்டங்கள் குவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து, கனடா அணிக்கு எதிராக 350 ஓட்டங்களும் இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிராக 265 ஓட்டங்களும் எடுத்துள்ளது.

இந்த இரு ஆட்டங்களிலும் இரு துடுப்பாட்ட வீரர்கள் சதமடித்துள்ளனர்.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி தாராளமாக 260 - 270 ஓட்டங்கள் வரை குவிக்க முடியும். சுழல்பந்து வீச்சுக்கு ஆடுகளம் நன்கு கைகொடுக்கும். மேலும் மின்னொளியில் இங்கு ஓட்டங்களைக் குவிப்பது என்பது கடினமான விடயம். பனிப்பொழிவு பெரிய பிரச்சினையாக இருக்காது. இதை சமாளிக்க இரசாயனத் திரவம் பயன்படுத்தவுள்ளோம் என்றார்.







யாழ்.பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் நேற்று தனது பதவியைப் பொறுப்பேற்றார். இந்நிகழ்வில் புதிய துணைவேந்தர் வரவேற்கப்படுவதனையும் பல்கலைக்கழக சமூகத்தினருடன் கலந்துரையாடல் இடம்பெறுவதனையும் தனது பதவியைப் பொறுப்பேற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கரன்)

## நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி இன்று ஆரம்பம்

சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர் வரும் 16ஆம் திகதிவரை யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியானது நீதியமைச்சின் செயலாளரினால் விசேட அனுமதி வழங்கப் பட்டு நடைபெறுகின்றது.

பல நிர்வாக சேவைகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளும் சிரேஷ்ட கணக்காளர்களும் விரிவுரைகளை நடாத்தவுள்ளனர். இவ்வா றான பயிற்சிப் பட்டறை நடாத்தப்படுவது இதுவே முதற்தடவையென்றும் உத்தியோகத் தர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக் குத் தோற்றுவதற்கும் இப்பயிற்சிநெறி பய னுள்ளதாக அமையுமென நீதிமன்ற வட்டா ரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-3-29)

## கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு

பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரி வுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா வின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத் தில் பி.ப 2 மணிக்கு பிரதேச செயலர் இரா. வர தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதி நிகழ்வில் தடகள இறுதிப் போட்டி களும் உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை யின் வைத்திய அதிகாரி கே.மயிலேறும் பெரு மாள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.

அத்துடன் வெற்றி பெற்ற கழகங்களுக் கான வெற்றிக் கேடயமும் வெற்றிச் சான்றி தழும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-24)

☆☆☆

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க பணி மனைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்க ளுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி வெள் ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு ஆழியவளை, அருணோதயா மைதானத்தில் உதவி அர சாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு 553ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தள பதி, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ. எவ்.திருமதி ரூபசிங்கம், வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் ஐ.ஸ்ரீ ரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## போக்குவரத்து விதிகளை மீறியோரிடம் இருந்து தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஒருவழிப்பாதையைக் கடைப்பிடிக்காமல் செல்லும் மோட்டார் வாக னங்களுக்கு நேற்று யாழ்.பொலிஸாரால் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

மேலும் வாகன சாரதிகள் ஒருவழிப்பாதை மற்றும் சமிக்ஞைகளைக் கவனித்துப் பய ணிக்குமாறும் மீறுவோர் மீது சட்ட நடவ டிக்கை எடுக்கப்படுமென்றும் யாழ்.பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

## தென்மராட்சி வலய விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நடைபெறும் வலயமட்ட விளையாட்டுப் போட் டிகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர் வரும் மே மாதம் 3ஆம் திகதி வரை நடை பெறவுள்ளன.

இப்போட்டியில் 19 வயது ஆண்களுக் கான கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை யும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்திலும் 19 வயது பெண்க ளுக்கான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடை பெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

## அனுமதிப்பத்திரமின்றி மூங்கில்களை ஏற்றிச் சென்றவருக்கு 1500 ரூபாய் அபராதம்

(கரவெட்டி)

அனுமதிப்பத்திரமின்றி மூங்கில் மரங் களை கொண்டு சென்ற வாகன சாரதிக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் 5 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறுமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

வாகனத்தில் மூங்கில் மரங்களை ஏற்றிக் கொண்டு சென்றவேளை சாவகச்சேரி நகரப் பகுதியில் வைத்து குறித்த சாரதி சாவகச்சேரி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு நேற் றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன் னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத் தையும் மேற்குறித்த காலப்பகுதிக்கு குற்றம் ஏதாவது செய்தால் 6 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-3-24-29)

## மதுபோதையில் வாகனத்தை செலுத்திய சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

கொடிகாமப் பகுதியில் மதுபோதையில் லொறியை செலுத்திய சாரதிக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து சாவகச்சேரி நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி சாரதி சம்பவதினம் மதுபோதை யில் வாகனத்தைச் செலுத்திய வேளை கொடி காமப் பொலிஸாரினால் கைதுசெய்யப் பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலை யில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி மேற்குறித்த சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்ட மையால் 5 ஆயிரம் ரூபா அபராதத்தையும் 3 மாத காலத்திற்குள் எதுவிதமான வாகனத் தையும் செலுத்தக்கூடாது என்றும் சாரதி அனுமதி பத்திரத்தை நீதிமன்ற பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24-29)

## சட்டவிரோத மண் அகழ்வால் தூர்ந்து போயுள்ள வீதி

(கொழும்புத்துறை)

சட்டவிரோத மண்ணகழ்வு நடவடிக்கை யால் அரியாலை அரசடி வீதியின் ஒரு பகுதி தூர்ந்து போய் காணப்படுகிறது.

சடடவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவோர் வீதிக்கரையோரத்தில் மண் அகழ்ந்ததனால் இந்நிலையேற்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு பயணிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

## மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச் சபையின் சாவகச்சேரி தூய தோமஸ் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி யாலய அதிபர் க.சண்முகதாஸ் கலந்து சிறப் பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக அமெரிக்க இலங்கை மிஷன் திருச்சபையின் முன்பள்ளி மற்றும் பகல் பராமரிப்பு நிலைய யாழ்.பிராந் திய திட்டப் பணிப்பாளர் வண.அன்ரனி சுதாகர், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-29)




## ஹாட்லிக் கல்லூரியின் கல்லூரித் தினம்

யா/ஹாட்லிக் கல்லூரியின் கல்லூரித் தினம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேவாலய மண்டபத்தில் அதிபர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி நொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.குரு குலராஜா, அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர் என ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செய லாளர் கே.அருளானந்தம் அறிவித்துள் ளார். (ஸ்ரீ-3-19)

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி க.பொ.த(சா/த) 2010 பரீட்சைப் பெறுபேறுகள் ஒரு பார்வை

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்களின் மேற்கல்வியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. முன்னர் இப்பெறுபேறுகள் அரசாங்க /தனியார் துறை தொழில்களைப் பெறுவதற்கு முக்கிய தகைமையாக இருந்தது. ஆனால் இன்று க.பொ.த (உ/த) தகைமையே முக்கியமாகக் கருதப்படுகிறதெனினும் உயர்கல்விக்கு க.பொ.த சா/த தகைமைஇன்றும் முக்கியமாக உள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 2010 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு 217 மாணவர்கள் தோற்றி, யாவரும் க.பொ.த (உ/த) கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் இவர்களுள் 216 பேர் விஞ்ஞானப்பிரிவில் கற்பதற்குத் தகுதி பெற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. இக்கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகள் வருடாவருடம் சிறப்புற்று வருவது பாராட்டுக்குரியது. 2010ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற முதல் ஐந்து மாணவர்களில் நால்வர் இந்துக் கல்லூரி மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

A சித்தி எண்ணிக்கையில் பரீட்சைப் பெறுபேறுகள் பின்வருமாறு,

அட்டவணை -I

| தரம் | பேர் |
|---|---|
| 9ஏ | 11 |
| 8ஏ | 30 |
| 7ஏ | 21 |
| 6ஏ | 21 |
| 5ஏ | 22 |
| 4ஏ | 25 |

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 60% மானோர் 4 ஏயும் அதற்கு மேலும் கூடிய பெறுபேறுகள் பெற்றிருக்கின்றார்கள்.

க.பொ.த (சா/த) பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் தலா 9 பாடங்களை எடுக்க வேண்டும். இக் கல்லூரியில் 217 பேர் பரீட்சை எழுதினர். இதன் மூலம் (217×9) 1953 பாட அலகுகளுக்குத் தோற்றியிருந்தனர். அட்டவணை-II அலகுகளின் பெறு பேறுகள் தர அடிப்படையிலும் எண்ணிக்கையிலும் விகிதத்திலும் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை-II

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 996 | 50.99 |
| B | 377 | 19.30 |
| C | 436 | 22.32 |
| S | 130 | 6.66 |
| W | 14 | 0.72 |
| மொத்தம் | 1953 | 100 |

இப்பெறுபேறுகளை தொகுத்து நோக்குகையில், மொத்தம் 1953 பாடஅலகுகளில் மாணவர்கள் 996 பாட அலகுகளில் A சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மொத்த அலகுகளில் அரைவாசிக்கு மேற்பட்ட பாட அலகில் A சித்தி பெறப்பட்டுள்ளது. எமது நாட்டில் இங்கிலாந்தில் இருப்பது போல A*ஸ்ரார் பெறுபேறு கொடுப்பதில்லை. A* ஸ்ரார் பெறுபேறு இங்கு கொடுக்கப்பட்டிருப்பின் A சித்திகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கைகள் A*ஸ்ராக இருந்திருக்குமென கொள்ள இடமுண்டு. முழுப் பெறுபேற்றை நோக்குமிடத்து 14 பாடஅலகுகளில் மாத்திரமே மாணவர்கள் சித்தி பெறவில்லை. எனினும் இக் குறைபாட்டால் மாணவர்களின் அடுத்தகட்ட கல்வி பாதிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அட்டவணை III க.பொ.த (சா/த) 2010 ஆம் ஆண்டு தமிழ்மொழிமூலம் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளும் அட்டவணை- IV ஆங்கில மொழிமூலம் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளும் தனித்தனியாக தரப்பட்டுள்ளன. அட்டவணை V இல் முழு மாணவர்களின் பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன. ஆங்கில மொழிமூலம் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளும் மிகவும் உயர்வாக இருப்பதைக் காணமுடிகின்றது. பரீட்சைக்கு தோற்றிய 43 பேரும் ஆங்கிலத்தில் A சித்தி பெற்றிருப்பதும் 42 பேர் கணிதத்தில்A சித்தி பெற்றிருப்பதும் மிகவும் பாராட்டுதற்குரியது.

சமயம், தமிழ்மொழி, ஆங்கிலம், விஞ்ஞானமும் தொழில்நுட்பம், கணிதம், வரலாறு ஆகிய ஆறு கட்டாய பாடங்கள் மூன்று விருப்பு பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும். மூன்று பாடத் தொகுதிகளிலிருந்து 11 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆறு கட்டாய பாடங்களில் சமயம், தமிழ், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கணிதம், வரலாறு ஆகிய 5 பாடங்களில் மாணவர்கள் 100% சித்தியை பெற்றிருக்கின்றனர். ஆங்கிலத்தில் 3 மாணவர்கள் மாத்திரம் சித்தி பெறவில்லை. எனினும் சித்தி விகிதம் (98.2) என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது விருப்பப் பாடத் தொகுதியில் நாடக அரங்கியல், சித்திரம், சங்கீதம் ஆகிய பாடங்களில் சித்தி விகிதங்கள் முறையே 100% இருக்கின்றன.



ஆங்கில இலக்கியத்தில் சித்தி விகிதம் 98.3% தமிழ் இலக்கியத்தில் 95 வீதமாகவும் இருக்கின்றன.

இரண்டாவது விருப்பு பாடத் தொகுதியில் புவியியல், குடியுரிமைகல்வி ஆகியவற்றில் 100% சித்தி பெறப்பட்டுள்ளது. வர்த்தகமும் கணக்கியலில் சித்தி விகிதம் 98.9% மாகும்.

மூன்றாவது விருப் புப் பாடத் தொகுதியில் 217 மாணவர்களில் 175 மாணவர்கள் தகவல் தொழில் நுட்பப்பாடத்திற்கு தோற்றி ஒருவரைத் தவிர ஏனைய 174 பேரும் சித்தி பெற்றிருக்கின்றார்கள்.

மற்றும் சுகாதாரமும் உடற்கல்வியிலும் வடிவ தொழில்நுட்பவியலிலும் 100% சித்தி பெறப்பட்டுள்ளன.

தொகுத்து நோக்குகையில்,இந்துக் கல்லூரி மாணவர்களின் க.பொ.த (சா/த) பரீட்சை- 2010 பெறுபேறுகள் மிகவும் உயர்வாக இருப்பதும் கடந்த வருடங்களிலும் பார்க்க கணிதம், ஆங்கில பாடங்களில் பெறுபேறுகள் மிகவும் உயர்ந்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மீத்திறன் மாணவர்கள் ஆவர். அதனால் அவர்களின் பெறுபேறுகள் உயர்வாக இருக்கும்தானே எனச் சொல்பவர்களும் உண்டு.

அட்டவணை - III

### தமிழ்மொழி மூலம் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள்

| பாடம் | No. Applied | No. SAT | FIRST SITTING | | | | | % passed |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | A | B | C | S | W | |
| சைவசமயம் | 169 | 169 | 157 | 07 | 05 | - | - | 100 |
| கத்தோலிக்கம் | 03 | 03 | 03 | - | - | - | - | 100 |
| கிறிஸ்தவம் | 02 | 02 | - | 02 | - | - | - | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 174 | 174 | 93 | 44 | 37 | - | - | 100 |
| ஆங்கிலம் | 174 | 174 | 48 | 35 | 55 | 33 | 03 | 98.2 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 174 | 174 | 68 | 42 | 53 | 11 | - | 100 |
| கணிதம் | 174 | 174 | 139 | 18 | 16 | 01 | - | 100 |
| வரலாறு | 174 | 174 | 55 | 34 | 69 | 16 | - | 100 |
| சித்திரம் | 13 | 13 | 03 | 04 | 05 | 01 | - | 100 |
| சங்கீதம் | 13 | 13 | 04 | 05 | 03 | 01 | - | 100 |
| நடனம் | - | - | - | - | - | - | - | - |
| ஆங்கில இலக்கியம் | 18 | 18 | 01 | 04 | 02 | 09 | 02 | 88.8 |
| தமிழ் இலக்கியம் | 80 | 80 | 26 | 24 | 20 | 06 | 04 | 95.0 |
| நாடகமும் அரங்கியலும் | 47 | 47 | 07 | 24 | 16 | - | - | 100 |
| புவியியல் | 13 | 13 | 10 | 02 | 01 | - | - | 100 |
| வர்த்தகமும் கணக்கியலும் | 146 | 146 | 58 | 30 | 39 | 17 | 02 | 98.6 |
| குடியுரிமைக் கல்வி | 15 | 15 | 11 | - | 03 | 01 | - | 100 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 132 | 132 | 27 | 31 | 51 | 22 | 01 | 99.0 |
| உடற்கல்வியும் சுகாதாரமும் | 39 | 39 | 10 | 20 | 09 | - | - | 100 |
| வடிவத் தொழில்நுட்பம் | 03 | 03 | - | 02 | 01 | - | - | 100 |

அட்டவணை - IV

### ஆங்கிலமொழி மூலம் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள்

| பாடம் | No. Applied | No. SAT | FIRST SITTING | | | | | % passed |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | A | B | C | S | W | |
| SAIVAISM | 42 | 42 | 42 | - | - | - | - | 100 |
| R.C | 01 | 01 | 01 | - | - | - | - | 100 |
| NON R.C | - | - | - | - | - | - | - | - |
| TAMIL LANG & LIT | 43 | 43 | 28 | 12 | 03 | - | - | 100 |
| ENGLISH | 43 | 43 | 43 | - | - | - | - | 100 |
| SCIENCE & TECH | 43 | 43 | 29 | 04 | 10 | - | - | 100 |
| MATHS | 43 | 43 | 42 | 01 | - | - | - | 100 |
| HISTORY | 43 | 43 | 24 | 08 | 10 | 01 | - | 100 |
| ART | - | - | - | - | - | - | - | - |
| MUSIC | - | - | - | - | - | - | - | - |
| DANCE | - | - | - | - | - | - | - | - |
| ENGLISH LIT | 43 | 43 | 06 | 08 | 17 | 11 | 01 | 97.6 |
| TAMIL LIT | - | - | - | - | - | - | - | - |
| DRAMA & THEATRE | - | - | - | - | - | - | - | - |
| GEOGRAPHY | 02 | 02 | 02 | - | - | - | - | 100 |
| DEVELOPMENT ST. | - | - | - | - | - | - | - | - |
| COMM.& ACC. | 37 | 37 | 27 | 05 | 05 | - | - | 100 |
| CITIZENSHIP | 04 | 04 | 03 | - | 01 | - | - | 100 |
| AGRICULTURE | - | - | - | - | - | - | - | - |
| HOME SCIENCE | - | - | - | - | - | - | - | - |
| INFORM.TECHNO. | 43 | 43 | 29 | 10 | 04 | - | - | 100 |
| HYG.& PHY.ED. | - | - | - | - | - | - | - | - |

(15 ஆம் பக்கம் பார்க்க..)

# இன்று ஒரு தகவல்

## அலெக்சாண்டரின் நம்பிக்கை

நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் இந்த உலகில் வாழவே முடியாது. எந்தச்செயலையும் செய்யவும் இயலாது.

அவநம்பிக்கையுடன் இருந்தால் எப்பவும் அவஸ்தைதான். நாம் நம்புவது நடைபெறுகிறதோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால் எதையும் நம்பித்தான் நம் வாழ்க்கையில் அடி எடுத்து வைக்க வேண்டியுள்ளது.

அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங்குபவன் தனக்கு முதல் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் வாங்குகிறான். பரீட்சை எழுதும் மாணவன் சித்தியடைந்து விடுவேன் என்று நம்புகிறான்.

போட்டியில் கலந்து கொள்பவனுக்கு எனக்கு முதல் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளுர இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் முடிவு வேறுமாதிரி ஆகிவிடுகிறது. ஆனால் அதற்காக அவன் மனம் தளர்ந்து போவதில்லை. மீண்டும் அடுத்த முறையும் போட்டியில் கலந்து கொள்கிறான். இந்த நம்பிக்கைதான் மனித வாழ்க்கைக்கு ஆதாரம்.

ஒருகடையில் தேநீர் அருந்துகிறீர்கள். அந்த தேநீர் நல்லதுதானா அல்லது அதில் விஷம்கலந்திருக்குமா? என்ற சந்தேகம் உங்களுக்கு வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன்பின் எப்படி அருந்த முடியும்? நம்பித்தான் அருந்த வேண்டும்.

ரயில் ஒழுங்காக ஊர் போய்ச்சேரும் என்ற நம்பிக்கை இருந்தால்தான் அதில் ஏறி அமர்கிறோம். நாம் எழுதும் கடிதம் ஒழுங்காகப்போய்ச்சேரும் என்ற நம்பிக்கையிருப்பதால் தான் தபால் பெட்டியில் சேர்க்கிறோம்.

மனித நம்பிக்கை எந்த அளவுக்கு உறுதியாகவும் அறிவுபூர்வமாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு அலெக்சாண்டர் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒரு உதாரணமாகச் சொல்லலாம்.

இந்த உலகம் முழுவதையும் வெற்றி கொள்ள வேண்டும் என்று புறப்பட்டார்அலெக்சாண்டர். ஒரு நாள் அவர் சிட்னஸ் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது அவருக்குக் கடுமையான நோய் வந்துவிட்டது. எனவே அவருடன் வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் அலெக்சாண்டரைக் குணப்படுத்த என்னென்னவோ முயற்சிகளையெல்லாம் செய்தார்கள். என்றாலும் அவர்களால் அலெக்சாண்டருக்கு வந்திருப்பது என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனெனில் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு வரக்கூடிய விநோதமான நோய். ஆனால் அலக்சாண்டர் அந்தச்சமயத்தில் இருந்த இடமே எதிரிக்குச் சொந்தமான பகுதி.பாரசீக மன்னரின் ஆளுகைக்குட்பட்ட பகுதி அது.

''இப்பொழுது என்ன செய்வது?'' என்று அனைவரும் யோசித்தனர்.

பாரசீக மன்னரின் அரண்மனையில் உள்ள வைத்தியர் வந்தால் இந்த நோயை குணப்படுத்தி விடுவார் என்று சிலர் கூறினார்கள்.மற்றும் சிலர் இருந்தாலும் எதிரியின் நாட்டில் வைத்தியரைக்கூப்பிட்டு எப்படி நம்பி வைத்தியம் பார்க்கச் சொல்வது என்று தயங்கினார்கள்.

ஆனால் அலெக்சாண்டர் மட்டும் தயங்கவேயில்லை. "பரவாயில்லை. பாரசீக மன்னரின் மருத்துவரை அழைத்து கொண்டு வாருங்கள்'' என்று சொல்லி விட்டார். அதன்படியே பாரசீக மருத்துவர் அழைத்துவரப்பட்டார். அலெக்சாண்டர் உடலை அவர் பரிசோதித்துப் பார்த்தார்.

அதன்பின் சரி, இந்த நோயைக் குணப்படுத்தி விடமுடியும் பயப்பட வேண்டியதில்லை. ஆனால், இதற்கு ஒரு மூலிகை ரசம் தயார் செய்து கொடுக்க வேண்டும். நான் சென்று அதை தயாரித்துக்கொண்டு இரண்டு நாட்களில் வருகிறேன் என்று சொல்லி விட்டு சென்றார் அந்த மருத்துவர்.

சொன்னதுபோலவே இரண்டு நாட்கள் கழித்து மூலிகை ரசத்துடன் வந்தார். இதற்கிடையில் அலெக்சாண்டரின் தளபதிகளில் ஒருவன் இரகசியமாக அலக்சாண்டருக்கு ஒரு எச்சரிக்கை கடிதம் கொடுத்தனுப்பினான்.

அதை வாங்கி என்ன விடயம் என்று அலக்சாண்டர் படித்துப்பார்த்தார். இப்போது உங்களிடம் வந்திருக்கும் எதிரி நாட்டு வைத்தியனை நம்பாதீர்கள். அவர் கொண்டு வந்திருக்கும் மூலிகை ரசத்தில் விஷம் கலந்திருக்கும் என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது.

அதைப்படித்துப் பார்த்தார் அலெக்சாண்டர். இருந்தாலும் அதனால் அவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை. வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கிக் குடித்துவிட்டார். அதன் பின்புதான் கடிதத்திலிருந்த விடயத்தை மருத்துவரிடம் அலக்சாண்டர் கேட்டார்.

அதைக்கேட்ட வைத்தியர் தன்மீது அலக்சாண்டர் வைத்திருந்த நம்பிக்கையைப் பார்த்து அப்படியே திகைத்து விட்டார். வைத்தியர் உண்மையிலேயே நல்ல மருந்தைத் தான் கொண்டு வந்திருந்தார். அதில் விஷம் எதுவுமில்லை.

அதன் பின் அலக்சாண்டர் வைத்தியரை பார்த்து பின்வருமாறு கூறினார்.

நம்பிக்கை என்ற அச்சாணியை ஆதாரமாக வைத்துதான் இந்த உலகம் இயங்கி கொண்டிருக்கிறது. எனக்குப் பகைவராக இருந்தாலும் பாரசீக மன்னர் மிகவும் பெரியவர். அத்தகைய மன்னரின் அரண்மனை வைத்தியர் தொழிலில் நேர்மை இல்லாதவராக இருக்கமாட்டார். அப்படி இருந்தால் அவரை அரண்மனை வைத்தியராக அங்கே வைத்திருக்கமாட்டார்கள் என்று நம்பினேன். என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பரந்தன் பஸ்நிலையத்திற்கு அருகிலுள்ள 5 கடைகளில் பாரிய கொள்ளைச்சம்பவம்

## பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

பரந்தன் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள 5 தனியார் கடைகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு பாரிய கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதில் 2 இலட்சத்து 65ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பல இலட்சம்பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இரும்புக் கடையொன்றிலிருந்து 2இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பணமும் இரண்டு தொலைபேசி விற்பனை நிலையங்களிலிருந்து 46 தொலைபேசிகளும் ஹோட்டல் ஒன்றிலிருந்து சிகரெட்பெட்டி மற்றும் பணமும் பலசரக்குக் கடையிலிருந்து பல்வேறு பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக் கொள்ளைச்சம்பவம் பற்றி பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அவ் விடத்திற்கு விரைந்த பொலிஸாரும் படையினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியிலுள்ள 80 வீதமான கடைகள் பூட்டப்பட்டு இராணுவ அதிகாரிகளால் அப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அக் கூட்டத்தில் இரவுக்காவலாளியை நியமிப்பதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதைத் தொடர்ந்து இராணுவத்தினரின் அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்துக்கடைகளும் திறக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. (ஸ்ரீ-3)

# இராசி பலன்

02.04.2011
(பங்குனி 19, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 6.39 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 12.23 மணிவரை
இராகுகாலம் 9.11- 10.41 மணிவரை
சுபநேரம் 3.11-4.41 மணிவரை
செல்லத்துரை சுவாமிகள் நினைவுதினம்

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடிய நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், சயனசுகக்குறைவுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**இடபம்** காலைநேரத்திலேயே இனிய செய்திகள் வந்துசேரலாம், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்,உற்சாகமான நாள்.

**மிதுனம்** அதிக பிரயாசையுடன் செயற்படும் நாள், அந்நியர் உதவி கிடைத்து மகிழ்வீர்கள்,கட்டிடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கெள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** உறவினர்களின் மனஸ்தாபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பணத் தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும், பிரயாண பயம் ஏற்படலாம்.

**கன்னி** குடும்பத்தினருடன் குதூகலப் பயணம் மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம், களஸ்திர சுகமுண்டு, பொருட் சேர்க்கையுண்டு, செல்வாக்கான நாள்.

**துலாம்** நல்ல தகவல்கள் நாடிவரும் நாள், உடல்நலம் சீராகும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், உங்கள் கருத்திற்கு மதிப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், சுபகாரியப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும்.

**தனுசு** தாராளமாகச் செலவு செய்து மகிமும் நாள், நல்ல நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறும், செல்வாக்கு மேலோங்கும், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவிகேட்க முன்வரலாம், இளைய சகோதரர்வழியில் இனிய செய்தி ஒன்று வந்து சேரும்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலை உயரும், புகழ் கூடும்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், தேவையற்ற கற்பனைகளை வளர்ப்பீர்கள், பெரியமனிதரின் சந்திப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

# தமிழ் மொழித் தின எழுத்தாக்க போட்டிகள்

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி கோட்டங்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை கோட்டத்திற்கான பேரட்டிகள் வடஇந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டி கோட்டத்திற்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மருதங்கேணி கோட்டத்திற்கான போட்டிகள் யா/குடத்தனை அ.த.க.பாடசாலையிலும் தாளையடி றோ.க.த.க.பாடசாலையிலும் நடைபெறுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களின் வேதனம்


வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமை யாற்றி தற்காலிகமாக யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சித்திரை மாத வேதனப்பட்டியல் யாழ். கல்விவலய நிதிக்கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40-50 | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 | 90 |
| தக்காளி | 80 | 150 | 100 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 80 | 60 | 70 |
| கரட் | 120 | 140 | 160 | 150 |
| பூசணி | 40 | 50 | 60 | 60 |
| புடோல் | 30 | 50 | 70 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 60 | 80 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 | 90 |
| பயற்றங்காய் | 70 | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 50 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 130 |
| முருங்கைக்காய் | 450-500 | 400 | - | 500 |
| போஞ்சி | 100 | 100 | 150 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 50 | 30 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 50-60 | 40 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |





வடமாகாணத்தில் இலங்கை அரசின் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கான வேலைப் பட்டறை அண்மையில் வடமாகாண கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டத் தலைவி செல்வி நளினி சேனாசேகர விளக்கமளிப்பதையும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜா, வட மாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி மற்றும் திணைக்களத் தலைவர்கள் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- என். குமார்)*

# பெண்கள் ஆய்வு நிலையத்தினால் யாழ்ப்பாணத்தில் நூலகம் திறப்பு

பெண்கள் ஆய்வு நிலையத்தினால் பெண் நிலைவாத கற்கை நெறி சம்பந்தமான நூல்கள் அடங்கிய ஒரு சிறுநூலகம் இல.46, செட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் சமூகவியல், மானிடவியல் தொடர்பான துறைகளை உள்ளடக்கிய பெண் பற்றிய விசாரணைகளை கற்கை நெறித் தளத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வாசித்துப் பயன்பெறலாம். அத்துடன் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நூலகத்தைப் பயன்படுத்த விரும்புவோர் முன்கூட்டியே நூலகப் பொறுப்பாளருக்கு அறிவித்தால் நூலகம் திறந்து வைக்கப்படுமென பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விமானநிலைய தங்க கொள்ளையுடன் தொடர்புடைய ஏழு ஊழியர்கள் கைது

## தங்க பிஸ்கட்டுகளும் மீட்பு

பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையசுங்கப்பிரிவு களஞ்சிய அறையிலிருந்து காணாமல் போன தங்க நகைகளை கைப்பற்றியுள்ள பொலிஸார், விமான சேவை நிறுவனமொன்றில் பணியாற்றும் ஊழியர்கள் ஏழு பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கொழும்பு செட்டித் தெருவில் உள்ள பிரபல தங்க வியாபாரி ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில் விமான நிலையத்திலுள்ள களஞ்சிய அறையிலிருந்த சுமார் 60 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட 126 தங்க பிஸ்கட்டுகள் அண்மையில் காணாமல் போயிருந்தன.

ஊழியர்கள் சிலரின் உதவியுடன் குறித்த அறை உடைக்கப்பட்டு தங்கம் கொள்ளையிடப்பட்டிருக்கலாம் என ஆரம்பத்தில் சந்தேகிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென இரு சிரேஷ்ட சுங்க அதிகாரிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டதுடன் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் காணாமல் போன தங்க பிஸ்கட்டுகளில் கணிசமானவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அதனையடுத்து இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விமான சேவை நிறுவனமொன்றில் பணிபுரியும் 7 ஊழியர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எஞ்சிய தங்க பிஸ்கட்டுகள் சிலவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட 22 இலட்சம் ரூபா பணம் சந்தேக நபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)


# கேள்வி அறிவித்தல்

**கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்.**

01 வட இலங்கைச் சங்கீத சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப்பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.

02 ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும், பதிவுப்புத்தகம் 2011ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

03 கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 2011.04.04ஆம் திகதியிலிருந்து 2011.04.12ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் வட இலங்கைச் சங்கீத சபையினால் 2011.04.15ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினம் வட இலங்கைச் சங்கீத சபை அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்குக் கேள்விப்பத்திரப்பெட்டி திறக்கப்படும்.

04 மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தில் கீழ் விளங்கக்கூடாது.

05 கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப் பணங்களை யாழ்ப்பாண கல்வி வலய வளாகத்தில் அமைந்துள்ள வட இலங்கைச் சங்கீத சபையில் செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திரப் படிவங்களைப் பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விபரமும் | மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் | மொத்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| வடஇலங்கைச் சங்கீத சபைக்கான அரங்கு கீழ்த்தளம் அமைத்தல் 140'- 0" X 50'- 0" | 1000/= | 270,000/= | M 5/C6 | 13,500,000/= |

06 கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீடு அறிக்கை பத்திரங்களின் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதனை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.

07 கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறுபிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறைகளையும் வேறு ஒரு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விபரமும், ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வட இலங்கைச் சங்கீத சபை, வலயக் கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு வட இலங்கைச் சங்கீத சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2011.04.15ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் இடப்பட வேண்டும்.

08 குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கமுடியும்.

09 தங்களால் முன்னர் மேற்கொள்ளப்பட்டவையும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வருபவையுமான கட்டட வேலைகள் தொடர்பான விபரங்கள் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**வட இலங்கைச் சங்கீத சபைத்தலைவரும்,**
**யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரும்.**
**(திருமதி. அ.வேதநாயகம்)**

(சி-2847)


# கடனட்டை மோசடியை தடுக்க நிபுணர்குழு

(கொழும்பு)

கடன் அட்டை மோசடியைத் தடுப்பதற்கான நிபுணர்குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை கொடுப்பனவு முறை மோசடி தொடர்பான சட்டத்தின் பிரகாரம் கடனட்டை மோசடி குறித்து விசாரணை நடத்தும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, பொலிஸாருக்கு உதவுவதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இங்குகருத்துத்தெரிவித்த அமைச்சர், கடந்த 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவு முறை மோசடி தொடர்பான சட்டத்தின் கீழ் கடனட்டை மோசடி மற்றும் அது தொடர்பான மோசடிகளை விசாரிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு விசாரணைகளின் போது உதவுவதற்காக பொறியியல்துறை மற்றும் மென்பொருள் பொறியியல் தொடர்பில் தகைமையுள்ள நபர்களடங்கிய குழுவொன்றை நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி விசேட வர்த்தமானி மூலம் நிபுணர்குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு இதற்கு பாராளுமன்ற அனுமதி பெறுவதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)


**யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**
**நவோதய பாடசாலை, வயாவிளான்**

## பழைய மாணவர் ஒன்றுகூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும்

மேற்படி நிகழ்வு பழைய மாணவர் சங்கத் தலைவர், பாடசாலை அதிபர் திரு.க.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம் | : 16.04.2011 சனிக்கிழமை |
| நேரம் | : மு.ப. 9.30 மணி |
| இடம் | : பாடசாலை மண்டபம் |

(சி-2848)

அன்று இவ்வருடத்திற்கான புதிய உத்தியோகத்தர் தெரிவும் இடம் பெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:- சங்கம் தொடர்பான பிரேரணைகள் ஏதும் இருப்பின் 11.04.2011இற்கு முன் அவற்றை ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

01.04.2011

திரு.கிறிஸ்தோபர் அலோசியஸ்,
செயலாளர்.

# காசநோய் சமூக அணுகுமுறை

## 24 காசநோய்க்கான விழிப்புணர்வு

9.காசநோயாளர்கள் மருந்து எடுத்தலை இடையில் நிறுத்தலைத் தவிர்க்கலாம்.

10.மக்கள் காசநோய் சிகிச்சைக்குச் செல்வதற்கு உதவுதல்.

11.உதவி வழங்கும் நிறுவனங்களில் இருந்து உதவியினைப் பெற்றுக் கொடுக்கலாம்.

12.கிராமப் பொது நிகழ்வுகளில் காசநோய் பற்றிய விழிப்புணர்வுகளையும் உள்ளடக்கல்.

**காசநோய்க்கட்டுப்பாட்டில் நேர முகாமைத்துவம்.**

இரண்டு கிழமைக்கு மேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை இரண்டு தடவை களாவது செய்தல்.இதில் நோய் அறிகுறி உடையவர்கள் நேரமுகாமைத்துவத்தினை கடைப்பிடித்தால் உடனே நோயினை கண்டறியக் கூடியதாகவும்அமையும்.

நேரமில்லை எனக்கூறி இருமல் இருப்பவர்கள் சளிப்பரிசோதனைசெய்ய பின் நிற்க்க கூடாது பிறகு பார்ப்போம் என இருமல் இருப்போர் காலங்களைக்கடத்தக் கூடாது.காசநோய்க் கட்டுப்பாட்டில் ஈடுபடுவோரும் நாளாந்தத் திட்டம், மாதாந்தத் திட்டம், காலாண்டுக்கான திட்டம், வருடாந்தத்திட்டங்களை வரையறுத்து வேலை செய்தல் வேண்டும்.

கடந்த காலத்தை மீளாய்வு செய்வதால் எதிர்வரும் காலங்களில் செய்ய வேண்டியவற்றை இலகுவாகவும்,சரியாகவும் செய்யலாம். நேரம் விரயமாகாது இருப்பதற்காக சிறப்பாகத் திட்டமிட்டு செயற்படல் வேண்டும்.

**தொடர்பாடல் திறமையும், காசநோய்க் கட்டுப்பாடும்**

காசநோய் தொடர்பான செய்தி அனைவருக்கும் கிடைக்கும் போது காசநோய்க் கட்டுப்பாடு இலகுவானதாக அமையும். குறிப்பாக வேலை செய்யும் இடங்களில் இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் இருப்பின் காசநோயாக இருக்கலாம் என்ற செய்தியினை ஊழியர்கள், அதிகாரிகள், உரிமையாளர்கள், அறிந்து இருத்தல் வேண்டும்.இத்தகையவர்களுடன் விசேட சலுகைகளாக விடுமுறை, சிறிய இடைவேளை ,ஊக்குவிப்புப் பணம் கொடுத்துச் சளிப்பரிசோதனை செய் தல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் காசநோய் பற்றிய விழிப்புணர்வுகளைகுடும்பத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள்,அயலவர்கள் என்பவர்களிற்கு ஏற்படுத்த சிறந்த தொடர்பாடலைப் பயன்படுத்தல் வேண்டும். கிராமத்தில் தொடர்பாடல் குறைந்த வயோதிபர்கள்,தனிமையில் வாழ்பவர்கள் தினமும் பகல் வேலைக்கு செல்பவர்கள் என்பவர்களிற்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும்.தொடர்பாடல்களிற்கு பல ஊடகங்கள் இருப்பினும் தனிமனித செய்தித் தொடர்பு மிகவும் பெறுமதியானது. மேலும் நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்று சமூகத்தினை பின்னூட்டல் அவசியம்.

காசநோயினால் குணமடைந்தவர்கள் மூலம் சமூகத்தில் ஏனையவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும். சமூகத்தில் மக்கள் தாமாகவே முன்வந்து சளிப்பரிசோதனை செய்யும் நிலையினை அதிகரிக்க வேண்டும்.

சமுதாய நேரடிக் கண்காணிப்பிலான சிகிச்சை (Community DOTS), காச நோய் நலன் பேணலில் சமூகத்தின் பங்கு

1. நோய் அறிகுறி உடையவர்களை அடையாளம் காண உதவுதல்.

2. நோய் அறிகுறி உடையவர்களின் சளியினைச் சேகரித்து மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு சளிப்பரிசோதனைக்கு கொண்டுவர உதவுதல்.

3.காச நோய்க்குரிய மருந்துகளை விநியோகிக்க உதவுதல்

4. மருந்து எடுக்கத்தவறிய காசநோயாளிகளை தேடிக் கண்டுபிடிக்க உதவும்.

5. காசநோயாளிகள் மருந்தினை ஒழுங்காக எடுத்தலைக் கண்காணித்தல்

6. மருந்து எடுக்காமல் விட்ட காச நோயாளிகளை மீளவும் மருந்து எடுக்கச் செய்தல்.

7. காசநோய்க்குரிய மருந்துகளைப் பாதுகாப்பதில் உதவுதல்

8. நோயாளிகள் மருந்து உட்கொள்வதனை நேரில் அவதானித்தல்

9. காசநோய் அறிகுறி உடையவர்களை மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் மருத்துவ ஆலோசனை பெற வகை செய்தல்

10. காசநோயாளிகள் கிரமமாக மருந்துகளை எடுக்கின்றனரா எனக் கண்காணித்தல்

11. காசநோய் தொடர்பாக ஏனையவர்களிற்கு விழிப்பூட்டல்

12. காசநோய் தொடர்பான சமூக வடுவினைக் குறைத்தல்

13. காசநோயாளிகளிற்கும் இலவசமான சுகாதார சேவை இலகுவில் கிடைப்பதற்கு வழிவகைசெய்தல்.

14. காசநோயாளிகளிற்கு தொடர்ச்சியாக 6 மாதங்கள் மருந்து எடுப்பதன் அவசியத்தினை ஏற்று கொள்ளச் செய்தல்

15. காசநோயாளிகளிற்கும் அவர்களது குடும்பத்திற்கும் ஆதரவு நல்குதல்.

16.காசநோய் குணமடைந்தவர்களிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவுதல்.

17. வேலை செய்யும் இடங்களில் காசநோய் அறிகுறிகள் உடையோர் காணப்படின் அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு உதவுதல்

18. இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்வதற்கு தனிப்பட்ட ஆய்வு கூட வசதிகள் உருவாக்குவதற்கு உதவும்

19. காசநோயாளிகளுடன் தொடர்புடையோர் உடனடியாக 06, 12, 18, 24, ஆகிய மாதங்களில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல்.

**காசநோய் இல்லாத சூழலை உருவாக்குவது எப்படி?**

ஒவ்வொரு தனி 'ானிதனும் 2 கிழமைகளிற்கு மேல் இரும ் காணப்படின் சளிப்பரிசோதனை செய்து காசநோய் இல்லை என்பதனை உறுதிப்படுத்துவதால் காசநோயினால் ஒருவரில் இருந்து மற்றையவர்களிற்கு நோய்த் தொற்றல் வாய்ப்பு இல்லாது போகும். இதனை ஒவ்வொருவரும் தமது குடும்பம், நண்பர்கள், அயலவர்கள், உடன் வேலை செய்பவர்களுக்கு எடுத்து இயம்ப வேண்டும். இதனால் ஒருவரின் குடும்பத்தில், கிராமத்தில், சமூகத்தில் என காசநோய் அற்றுப் போகும் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.

காசநோய் தொடர்பாக ஒவ்வொரு கிராமத்திலும் கிராமிய கட்டுப்பாட்டு உதவியாளராக சிலர் செயற்படலாம்.

கிராமிய காசநோய்க் கட்டுப்பாட்டு உதவியாளர்களது செயற்பாடுகள்.

காசநோய் அறிகுறிகள் பற்றி ஏனையவர்களிற்கு எடுத்துக் கூறல். குறிப்பாக தொடர்பாடல் குறைந்து தனிமையில் வசிப்போர், முதியோர், கசிப்புக்குடிப்போர் என்பவர்களிற்கு எடுத்துக்கூறல். நோய் அறிகுறி காணப்படின் சிகிச்சைக்குவர உதவுதல். அவர்களது மேற்பார்வையில் மருந்துகள் கொடுத்தல். 6 மாதங்கள் தொடர்ச்சியாக மருந்துகளை எடுத்தலைக் கண்காணித்தல். யாராவது ஒருவர் மருந்து எடுக்கா விட்டால் அதற்கு உரிய காரணத்தினை கண்டறிந்து தொடர்ந்து மருந்து எடுத்தலை ஊக்குவித்தல். காசநோயாளிகளின் போக்குவரத்திற்கு உதவுதல். போசாக்கு உள்ள உணவினை பெற உதவுதல். காசநோய் பரவுவதைத் தடுப்பதற்காக பொது இடங்களில் துப்புதலைத் தவிர்க்க உதவுதல். இருமும் போதும் தும்மும் போதும் கைக்குட்டையைப் பாவிக்க வழிகாட்டல்.

காசநோய் தொடர்பான நாடகங்கள், பாட்டுக்கள், வில்லுப் பாட்டுக்கள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வினை உருவாக்கம் செய்தல். காசநோயாளிகளுடன் சமூகமாக இணைந்து உதவுவதன் மூலம் சமூக வடுவினை இல்லாது செய்தல், காசத்திற்கு எதிரான நகரில் இவ்வாறு பல நவீனமாக அணுகுமுறைகளை சமூகத்தில் ஏற்படுத்துவதனால் செயற்பாடு களின் வேகத்தினை விரைவு படுத்தலாம். (தொடரும்)



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

## கொழும்புக் கம்பன்கழகம் நடத்தும் கம்பன் விழா

2011 ஆம் ஆண்டுக்கான கம்பன்விழா எதிர்வரும் 21,22,23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.இலங்கையில் கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 30 வருடங்கள் பூர்த்தியாகின்றன. வழமைபோல இவ்வாண்டுக் கம்பன் விழாவிலும் இயல், இசை, நாட்டிய நிகழ்ச்சிகளோடு நூல்வெளியீடு, தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவி வழங்குதல், கவிதை, பேச்சுப்போட்டிகள், நூற்கண்காட்சி, ஏற்றமிகு இளைஞர் விருது வழங்கல், கவிஞர்களுக்கான மகரந்தச் சிறகு விருது வழங்கல், உலகளாவிய ரீதியில் தமிழ்பணி செய்தோருக்கான கம்பன்புகழ் விருது வழங்கல், மூதறிஞர் கெளரவம் முதலிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கொழும்பு வெள்ளவத்தை இராம கிருஷ்ண தோட்டம் 11 ஆம் இலக்கத்திலுள்ள கொழும்புக்கம்பன் கோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஷ்மி ஆலயத்தில் பூசைகள் நடாத்தப்பட்டு கம்பன்பட ஊர்வலத்துடன் விழா ஆரம்பமாகவுள்ளது. வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் முதல்நாள் விழா நிகழ்வினை உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசரும், கொழும்புக்கம்பன் கழகப் பெருந்தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இவ்வாண்டும் தமிழகத்திலிருந்தும் ஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்புவோர் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கம்பன் விழா, செயலாளர், இல.11, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு 6 எனும் முகவரிக்குக் கடிதம் மூலமோ 2360525 எனும் இலக்கத்துடன் தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

கம்பன் விழாவில் பேராளர்களாக தமது பெயரை பதிவு செய்ய விரும்புவோர் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு தமது விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கலாம் என கம்பன் கழகத் தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த ஊதியமாக 750 ரூபா வழங்க வேண்டும்

### மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக வழங்கப்பட்டு வரும் 405 ரூபாவை உயர்த்தி அவர்களுக்கு நாளாந்த ஊதியமாக 750 ரூபாவை வழங்குமாறு மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கே.கே.பியதாச தோட்ட முதலாளிமார் சம்மேளத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொழிலாளர்களின் ஊதிய அதிகரிப்பு குறித்து மாகாண சபை உறுப்பினர்களுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். மலையக தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய அதிகரிப்பு தொடர்பாக இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை முதலாளிமாார் சம்மேளனம் மற்றும் தொழிற் சங்கங்களுக்கு இடையில் கைச்சாத்திடப்படும் கூட்டு ஒப்பந்தம் கடந்த 28 ஆம் திகதியுடன் காலாவதியானது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 405 ரூபா நாளாந்த ஊதியம் போதுமானது அல்ல எனவும் பியதாச சுட்டிக்காட்டியுள்ளார். மாதத்தில் 22 நாட்கள் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லாவிட்டால் 405 ரூபாவை பெற முடியாது. அந்த ஊதியம் 285 ரூபாவாக குறையும். தற்போதுள்ள பொருளாதார சூழலில் இந்த ஊதியமானது வாழ்க்கை நடத்த போது மானதல்ல என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக் குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களு க்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் திங் கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை 6 ஆம் குறுக்குத் தெரு சந்தியில் வைத்து வழங்கப்பட வுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்ப டுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறி த்த ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதி காரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பரீட்சை நேரத்துப் பதற்றத்தை தணிக்க சிறந்த வழிமுறைகள்




தேர்வு என்று சொன்னாலே பலருக்கு பதற்றம் தானாக வந்துவிடும். பதற்றம் அதிகமானதும்படித்தது மறந்துவிடும். படித்ததெல்லாம் மறந்த பின் தேர்வு எழுதும் போது பயம் வந்துவிடும். தேர்வுக்கு பயந்தால் நினைவிலுள்ள தகவல்கள் கூட மறந்துவிடும். இப்படித் தேர்வு நேரத்தில் குழம்பிப்போன சிலர் நன்கு படித்திருந்தும் தேர்வை சில முறையில் எழுத இயலாத நிலையே ஏற்பட்டுவிடுகிறது. எவ்வளவுதான் சிறப்பாகப் படித்திருந்தாலும் தேர்வு நேரங்களில் ஏற்படும் குழப்பங்களையும் அதனைத்தவிர்க்கும் முறையில் வழிகளையும் மாணவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொள்வது நல்லதாகும்.

படித்த பாடங்களை திரும்பத் திரும்ப படிப்பதன் மூலம் - அந்தப் பாடத்தை நினைவில், எளிதில், மனதில் பதிய வைக்கலாம். மேலும் எப்பொழுதெல்லாம் அந்தத் தகவல்கள் தேவைப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் அவற்றை உபயோகித்துக் கொள்ளவும் முடியும். தேர்வுக்குப் 15 நாட்களுக்கு முன்பே ஏற்கனவே படித்த பாடத்தை திரும்பவும் படிப்பது அவசியமாகும். நேரத்திட்டம் - ஒன்றை வகுத்துக்கொண்டு ஒவ்வொருநாளும்எவ்வளவு மணி நேரம் ஒரு பாடத்தை திரும்பப் படிக்க வேண்டும்? என்பதை முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். நேரமிருந்தால் கடந்த ஆண்டு நடந்த தேர்வின் கேள்வித்தாள்களில் இடம்பெற்ற கேள்விகளுக்கான பதில்களை எழுதி நீங்களே திருத்தி மதிப்பெண் வழங்கிக் கொள்ளலாம்.

சில மாணவர்கள் இப்படியே முன்கூட்டியே திட்டமிடாமல் தேர்வுக்கு முன்பு இரவு நேரங்களில் வெகுநேரம் விழித்து தொடர்ந்து படிப்பார்கள். தொடர்ந்து இப்படி அதிகநேரம் கண்விழித்து படிக்காமல் திடீரென அதிக நேரம் கண் விழித்துப்படிப்பதால், உடலில் பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகிறது. சிலருக்கு தீராத தலைவலி ஏற்படும். காய்ச்சல் கூட ஏற்பட்டு தேர்வு எழுத இயலாத நிலை சில நேரங்களில் ஏற்பட்டுவிடும். எனவே திட்டமிட்டு முன்கூட்டியே ஒரு நேரத் திட்டத்தை வகுத்துக்கொண்டு படிக்கலாம்.

சிலரது பள்ளி அல்லது கல்லூரி வெகுதூரத்தில் இருக்கலாம். பஸ்ஸில் பயணம் செய்யும்போது புத்தகத்தை எடுத்துப்படிக்க இயலாத நிலை உருவாகும். சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேல்பயணம் செய்ய வேண்டியநிலை ஏற்படும் போது பயணம் செய்யும் நேரத்தையே படிப்பு நேரமாக மாற்றிக் கொள்ளலாம்.

தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் சிலர் ஓய்வு எடுக்காமல் படிப்பார்கள். ஓய்வு எடுப்பதற்கும் சிந்திப்பதற்கும் தகுந்த நேரத்தை ஒதுக்கத் தவறியவர்களுக்கு படிக்கும் போது குழப்பம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே தூக்கத்தை தியாகம் செய்வதைத் தவிர்த்து தேவையான அளவு தூங்குவதை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். தேர்வு நேரத்தில் அதிக நேரம் ஓய்வெடுக்க பலருக்கு நேரம் இருக்காது. எனவே சிறிது நேரம் ஓய்



வெடுத்து, பெரிய அளவில் புத்துணர்வுபெற சில பயிற்சிகளை பழகிக் கொள்ளலாம்.

**1. மூச்சு விடுதல் பயிற்சி**

மூச்சுவிடுதல் பயிற்சி என்பது அதிக அளவு மூச்சுக்காற்றை உள்ளிழுத்து, அந்த மூச்சுக்காற்றை வெளிவிடும் பயிற்சியாகும். இப்பயிற்சியை செய்ய விரும்புபவர்கள் தரையில் துணியை விரித்து அதன் மீது அமர்ந்து கொள்ளுங்கள். இப்பொழுது உங்கள் இரு கண்களையும் இறுக மூடிக்கொள்ளுங்கள்.


உங்கள் வலது பக்க மூக்குத்துவாரத்தை வலது கைப் பெருவிரலால் அழுத்தி மூடிக்கொள்ளுங்கள். இடதுமூக்கின் வழியாக காற்றை மெதுவாக உள்ளிழுத்துக் கொள்ளுங்கள். பின்பு மெதுவாக காற்றை வெளிவிடுங்கள். இப்படி ஐந்து முறை காற்றை மெதுவாக உள்ளிழுத்து பின்னர் மெதுவாக வெளிவிடுங்கள். அதன் பின்னர் மூக்கின் இடதுபுறமுள்ள துவாரத்தை இடது கை பெருவிரலால் அழுத்தி மூடிக் கொள்ளுங்கள். வலது புறமுள்ள மூக்குத்துவாரத்தின் வழியாக மெதுவாகக் காற்றை உள்ளே இழுங்கள். சிறிது நேரம் கழித்து உள்ளிழுத்த காற்றை மெதுவாக வெளியே விடுங்கள். இப்படி ஐந்து முறை காற்றை உள்ளே இழுத்து மெதுவாக வெளிவிடுங்கள். பின்னர் அழுத்தியிருந்த கைவிரலை அகற்றிவிட்டு மூக்கின் இரண்டு துவாரங்களின் வழியாகவும் மெதுவாகக் காற்றை உள்ளே இழுத்துக்கொள்ளுங்கள். பின்னர் மெதுவாக வெளிவிடுங்கள். இவ்வாறு திரும்பத்திரும்ப சுமார் ஐந்து முறை இப்பயிற்சியைச் செய்யலாம். இப்பயிற்சியை செய்வதன் மூலம் இரத்தத்திற்குத் தேவையான அதிக ஒட்சிசன் கிடைக்கும். இதனால் மன அழுத்தம் குறையவும் வாய்ப்புள்ளது.

**2. தோள்பட்டைப் பயிற்சி**

தோள்ப்பட்டைப்பயிற்சியை செய்ய விரும்புபவர்கள் ஓரிடத்தில் வசதியாக அமர்ந்து கொள்ளுங்கள். உங்கள் தோள்ப்பட்டையை மேலும் கீழும் மூன்று அல்லது நான்கு முறை அசைத்துக் கொள்ளுங்கள். அதேபோல தோள்பட்டையை முன்னும் பின்னும் அசைத்து வாருங்கள். இப்படி நான்கு அல்லது ஐந்து முறை செய்து பாருங்கள். அதன்பின்னர் திடீரென தோள்ப்பட்டையின் முனைப்பகுதி காதைத்தொடுகின்ற அளவிற்கு தோள்ப்பட்டையை உயர்த்துங்கள். அதேபோலத் திடீரென தோள்பட்டையை தளர்த்திக் கொள்ளுங்கள். இப்படி நான்கு முறை செய்வதன் மூலம் களைப்புக் கரைந்து போய்விடுகிறது. உற்சாகம் ஊற்றெடுக்கின்றது.

**3. கழுத்தை அசைக்கும் பயிற்சி**

கழுத்தை அசைக்கும் பயிற்சியை செய்ய விரும்புபவர்கள் முதலில் இரண்டுபக்கமும் உள்ள தோள்ப்பட்டைகளை தளர்த்திக் கொள்ளுங்கள். தலையை இடதுபுறத்தோள்ப்பட்டைப்பக்கமாக சாய்த்துக் கொள்ளுங்கள். இப்பொழுது உங்கள் இடது காது மடல், இடது தோள்ப்பட்டையைத் தொடுமாறு வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது மெதுவாக மூச்சை உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடுங்



கள். இப்படி நான்கு முறை செய்தபின்பு தலையை வலதுபுறமாகச் சரித்து வலது காதின் மடல் வலது தோள்ப்பட்டையைத் தொடுமாறு செய்யுங்கள். இப்பொழுது மெதுவாக காற்றை உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடுங்கள்.

இந்தப்பயிற்சி செய்யும் போது எந்தப்பக்கம் தலையைச் சாய்க்கிறோமோ அந்தக்கையின் விரல்கள் தலையின் உச்சியைத் தொடும்படி பார்த்துக்கொண்டால், பயிற்சியின் பலன் அதிகரிக்கும். இதன்மூலம் களைப்பு நீங்கும். புத்துணர்ச்சியும் பெறலாம்.

**4. முன்பக்கம் வளையும் பயிற்சி**

முன்பக்கம் வளையும் பயிற்சி மிகவும் எளிதான பயிற்சியாகும். இந்தப்பயிற்சியை செய்ய விரும்புபவர்கள் முதலில் ஒரு நாற்காலியில் பின்பக்கமாக சாய்ந்து, நிமிர்ந்து உட்கார்ந்து கொள்ளுங்கள். பின்னர் நன்கு மூச்சை உள்ளே இழுத்துக் கொள்ளுங்கள். உங்கள் இருகைகளையும் பின்பக்கம் கொண்



டுவாருங்கள். உங்கள் இடது கை விரல்களினால் வலது கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

முன்பு உள்ளிழுத்து வைத்துள்ள மூச்சுக்காற்றை முன்பக்கமாகச் சாய்ந்து கொண்டு மெதுவாக வெளியே விடுங்கள்.

இப்படி நான்கு அல்லது ஐந்து முறைகள் தொடர்ந்து செய்து வாருங்கள். பின்னர் பின்பக்கமாக இருந்த கைகளை முன்பக்கமாக மெதுவாகக் கொண்டுவந்து பயிற்சியை நிறைவு செய்யலாம். இப்பயிற்சி, தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பவருக்கு ஏற்படுகின்ற களைப்பை உடன் போக்கிக் கொள்ள உதவும். பதற்றத்தையும் நீக்கும்.

**5. அமர்ந்து திரும்பும் பயிற்சி**

இந்தப்பயிற்சியை செய்ய விரும்புபவர்கள் முதலில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள். பின்னர் இடது கையால் உங்கள் வலது காலின் விரல் நகங்களைத் தொடுங்கள். இடது கை வலது கையின் விரல்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் போதே உங்கள் வலது கையை நீங்கள் அமர்ந்திருக்கும் நாற்காலியின் பின்பக்கமாக கொண்டுவாருங்கள். இப்பொழுது மூச்சுக் காற்றை நன்கு

டாக்டர். எஸ். நாராயணராஜன்
M.B.A. Ph.D

உள்ளே இழுத்துக் கொள்ளுங்கள். சிறிது நேரம் அதே நிலையில் இருந்து கொண்டு வலது புறமாகத் திரும்புங்கள். பின்னர் உள்ளே இழுத்த காற்றை வெளியே விடுங்கள். இப்படித் தொடர்ந்து மூன்று அல்லது நான்கு முறை காற்றை உள்ளிழுத்து வெளிவிடுங்கள். அதன் பின்பு தொடக்க நிலைக்கு வாருங்கள்.

இப்பொழுது வலது கையால் இடது கால்விரல்களைத் தொடுங்கள். இடது கையை நாற்காலிக்குப்பின்புறம் கொண்டுவாருங்கள். மூச்சை மெதுவாக உள்ளிழுத்து வெளிவிடுங்கள். இதே நிலையிலிருந்து கொண்டு இடது புறமாகத் திரும்புங்கள். இப்படித் தொடர்ந்து மூன்று அல்லது நான்கு முறை காற்றை உள்ளிழுத்து வெளிவிடுங்கள். மீண்டும் தொடக்க நிலைக்கு வாருங்கள். இந்தப்பயிற்சி உடலின் உற்சாகத்தை அள்ளித்தரும் சிறந்த பயிற்சியாகும்.

பரீட்சைக்காலங்களிற்கு முன்பிருந்தே மாணவர்கள் மேற்படி பயிற்சிகளில் ஈடுபட்டு தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதன் மூலம் பரீட்சை நேரங்களில் ஏற்படக் கூடிய பதற்றத்தை இல்லாதொழிக்கலாம்.

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

13-XVI



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

### வாழைக்குட்டிகளை தெரிவு செய்தல்

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் வாழைத் தோட்டமொன்றிற்காக நடவுக்காக தெரிவு செய்யும் வாழைக்குட்டிகளை எதேச்சையாக தருவித்து நடவு செய்யாதீர்கள். வாழைக்குட்டி பெறப்படும் வாழைத்தோட்டத்தை நன்றாக ஆராய்ந்து அவ்வாழைகளில் எதுவிதமான பீடைகளோ நோய்களோ இல்லையென்பதனை உறுதிசெய்த பின்பு அதிலிருந்து வாழைக்குட்டிகளைப் பெறலாம்.

வாழையிலிருக்கும் பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகள் இவற்றுடன் நோய்கள் என்பனவற்றை இனங்காண விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், கமநல உத்தியோகத்தர்கள், விவசாய பீட உயிரியல்துறை விரிவுரையாளர்கள் மற்றும் விவசாய பீட மாணவர்களின் உதவியைப் பெற முடியும். வாழைச் செய்கையாளர்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களுக்கான வாழையில் பீடைகளின் முகாமைத்துவம் பற்றிய கண்காட்சியுடனான கலந்துரையாடலையும் விவசாய உயிரியல் துறை ஒழுங்கு செய்து தர ஆர்வம் கொண்டுள்ளது.

பூச்சி பீடைகளைப்பற்றியும் நோய் களைப்பற்றியும் தெளிவாக தெரிந்து கொள்ளு மிடத்து அவற்றிலிருந்து உங்களது வாழைத் தோட்டங்களைப் பாதுகாக்கவும், மேலும் பீடைகள், நோய்கள் பரவாது தடுக்கவும் தேவையான ஆலோசனைகளைப் பெற்று ஒன்றிணைந்த பீடை முகாமைத்து வத்தை சிறப்பாக செய்ய முடியும். இதில் அனைத்து விவசாயப் பெருமக்களும் ஒன்றிணைய வேண்டும். ஒருவர் தனியே பீடைகளை முகாமைத் துவப்படுத்திவிட முடியாது. அடம்பன் கொடியும் திரண்டாலே மிடுக்கு. இது அப்படியே இங்கே முழுமையாகப் பொருந்தும். ஒற்றுமையாக விவசாயப் பெருமக்கள் செயற்பாட்டால் முழுமையான பீடை முகாமைத்துவம் என்பது சாத்தியமே.



இங்கே வாழைச் செய்கையை ஆரம்பிக்கும் போது எடுக்கவேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள், வாழைக்குட்டிகளை நடுகைக்காக தருவிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள், நடுகை செய்தபின் பீடைப் பெருக்கத்தை மேற்பார்வை செய்தல் ஆகிய வற்றுடன் பீடைப் பெருக்கம் ஏற்படும் பட்சத்தில் அதனை கட்டுப்படுத்தலும் மேலும் பரவாது தடுத்தலும் ஆகியன அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டும். வாழைத் தோட்டம் எப்போதும் சுத்தமாக இருக்கவும் வேண்டும். சுத்தம் சுகம் தரும். வாழைத் தோட்டத்தை சரி வரப் பராமரிக்காது நாமே பீடைகளின் பெருக்கத்திற்கு தூண்டுதலாக இருக்கக்கூடாது. அநேகமான இடங்களில் கவனியாதுவிடப்பட்ட வாழைத்தோட்டங்களே பீடைப்பெருக்கத்திற்கும் நோய்கள் பெருகும் இடங்களாகவும் மாறிவிடுகின்றன. வருமுன் காத்தல் என்றுமே சிறப்புக்குரியது. வந்த பின்பு அவஸ்தைப்படுவதைவிட வருமுன் காத்தல் எப்போதுமே நன்மை தரும். வாருங்கள்! அனைவரும் ஒன்று சேர்ந்தால் பீடைகளின் பிரச்சினைக்கு முடிவு கட்டிவிடலாம். எதற்கும் ஒற்றுமையே சிறப்பு. (தொடரும்)

# ஸ்ரீரங்கா எம்.பி.யின் மெய்ப்பாதுகாவலர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(கொழும்பு)

பிரஜைகள் முன்னணி கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீரங்கா பயணம் செய்த வாகனம் செட்டிக் குளம் பகுதியில் விபத்தில் சிக்கியபோது காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த அவரது மெய்ப்பாதுகாவலராகிய பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தின் போது அதில் பயணித்த ஸ்ரீரங்காவும் அவரது சாரதியும் சிறு காயங்களுடன் மயிரிழையில் தப்பியுள்ளனர்.

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி அதிவேகமாக வந்த வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து செட்டிக்குளம் அஞ்சல் அலுவலக மதில் பகுதியையும் அருகில் இருந்த மதகு ஒன்றையும் உடைத்துக் கொண்டு போய் வீதியருகில் பாலை மரம் ஒன்றில் மோதி திரும்பி நிற்பதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் வாகனம் பலத்த சேதத்திற்குள்ளாகியதாக தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

### வடமாகாண முகாமை உதவியாளர்

## நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டது

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டோருக் கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம் அறிவித்துள்ளார்.

இந்நியமனம் நாளை மறுதினம் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# விடுதலைப்புலிகள் பயன்படுத்திய வாகனங்களை ஏலத்தில் விற்க அரசாங்கம் தீர்மானம்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட கனரக வாகனங்களை பிரசித்தமான ஏலத்தில் விட்டு விற்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தின்போது விடுதலைப்புலிகளினால் பயன்படுத்தப்பட்ட 50 கனரக வாகனங்களை ஏலத்தில் விற்க அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை இந்த கனரக வாகனங்கள் விடுதலைப் புலிகளுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனால் இந்த கனரக வாகனங்களை குறித்த அரசசார்பற்ற நிறுவனங்கள் இது வரை உரிமை கோராத நிலையில் அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக கிளிநொச்சியில் உள்ள உயர் அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தனியார்துறையினருக்கான ஓய்வூதியம் குறித்து கலந்துரையாட தொழிற்சங்கங்கள் தீர்மானம்

(கொழும்பு)

தனியார் துறையினருக்கான ஓய்வூதியத் திட்டம் குறித்து தமது நிலைப்பாட்டை அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கு முன்னர் தாம் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக தனியார் துறை தொழிற்சங்கத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை, தொழிற்சங்கங்கள், தொழில் தருநர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசிக்காமல் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இத்தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.


ஜே.வி.பி தலைமையிலான அனைத்து கம்பனி தொழிலாளர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க இதுதொடர்பாக கூறுகையில், நாம் ஓய்வூதியத்திட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல. நாம் ஓய்வூதியத் திட்டத்தை விரும்புகிறோம். ஆனால், தற்போதைய திட்டத்திற்கு தொழிலாளர்கள் சாதகமான பதிலளிப்பதை நாம் காணவில்லை. அதனாலேயே கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம் என்றார்.

சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அன்டன் மார்க்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், இத்திட்டத்தில் பல சந்தேகங்கள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

தனியார் துறையில் சுமார் 15 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளபோதிலும் ஊழியர்களை ஈர்க்கக்கூடிய நலதிட்டங்கள் இல்லாததால் அவ்வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



மத்திய சுகாதார அமைச்சினால் "தேசிய சுகாதார சிறப்பு விருது" வழங்கல் நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆதார, பொது வைத்தியசாலைகளுக்கிடையிலான போட்டியில் 2 ஆவது இடத்தைப் பெற்ற பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கான வெள்ளிக்கிண்ணத்தை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி.க. நந்தகுமார் மற்றும் முகாமைத்துவ மட்டங்களுக்கிடையிலான போட்டியில் 3 ஆவது இடத்தைப் பெற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கான வெண்கலப்பதக்கத்தை யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிமனை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.





வடமாகாண அபிவிருத்தி பற்றிய ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதம செயலாளர் அலுவலகத்தில், பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட உலகவங்கி ஆலோசகர் குழு மற்றும் நிதி ஆணைக்குழுவின் பிரதிநிதிகளைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: என்.குமார்)

# ஜனாதிபதிக்கு எதிரான சுவரொட்டி விவகாரம்; அடிப்படை உரிமைமீறல் மனு வாபஸ்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராகச் சுவரொட்டி அச்சிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட நபர், தான் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று முன்தினம் வாபஸ் பெற்றுள்ளார்.

அச்சகமொன்றின் உரிமையாளரான ஜயம்பதி புளத்சிங்கள எனும் இந்நபர் தனக்கு எதிராகக் கங்கொடவில நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து தான் விடுதலை செய்யப்பட்டதையடுத்து தனது அடிப்படை உரிமை மீறல் மனுவை வாபஸ் பெறுவதாக நேற்று முன்தினம் உயர்நீதிமன்றில் தெரிவித்தார்.

18ஆவது திருத்தச் சட்டத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராகச் சுவரொட்டிகளை அச்சிட்ட குற்றச்சாட்டில் கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆனால், தான் குற்றச்செயல் எதிலும் ஈடுபடவில்லை எனவும் தான் கட்சிகளுக்கிடையிலான அரசியல் மோதலால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தனது அடிப்படை உரிமை மீறல் மனுவில் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் இவ்விவகாரம் தொடர்பாகத் தனக்கு எதிராக கங்கொட்வில நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து தான் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் தனது அடிப்படை உரிமை மீறல் மனுவை வாபஸ் பெறுவதாக அவர் தெரிவித்தார்.

அதையடுத்து நீதிபதிகள் ஷிரானி திலகவர்த்தன, கே.ஸ்ரீபவன் ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழாம் இம்மனுவைத் தள்ளுபடி செய்தது.

(ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பண்டாரக்குளம் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(ஸ்ரீ-2)

# தொலைத்தொடர்பு கோபுரங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு

(கொழும்பு)

தொலைத்தொடர்பு கோபுரங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நாடளாவிய ரீதியில்ஆய்வொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளையடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவ் ஆணைக்குழு கூறியுள்ளது.

மின்னல் காரணமாக தமது வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுவதாகக் குடியிருப்பாளர்களிடமிருந்து ஒரு மாதத்தில் 10 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வலையமைப்புகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தர்மசிறி டி அல்விஸ் தெரிவித்தார்.

செல்லிடத் தொலைபேசி வலையமைப்புகள் அதிகரித்துள்ள நிலையில் தொலைத்தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இதனால் தமது ஆரோக்கியத்திற்குப் பாதிப்பு ஏற்படலாம் எனவும் மின்னல் தாக்கம் ஏற்படுமெனவும் குடியிருப்பாளர்கள் சிலர் கருதுகின்றனர் என அவர் கூறினார்.

உலக தரத்திற்கேற்ப இக்கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றினால் ஏற்படும் மின்னல் தாக்கத்தின் அளவு குறித்துத் தீர்மானிப்பது கடினம். பொதுமக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளை நாம் உதாசீனப்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார்.

பொதுவாக உயரமான பொருட்கள் எதுவுமில்லாத நிலையில்தான் தரையிலுள்ள பொருட்களை அல்லது நபர்களை மின்னல் ஈர்க்கும். எனினும் வலிமையான மின்னல் தாக்கும்போது மின்சார வடங்களில் தாக்கம் ஏற்பட்டு வீடுகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை ஆதாரமற்றவையாகும். எனவே அவற்றின் பாதிப்புக் குறித்து எமது ஆய்வுகள் முடிவடையும்வரை தெரியவரமாட்டா எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஹயஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருபாலை பழைய வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இருபாலை வீரபத்திரர்கோவிலடியைச் சேர்ந்த என். ஜெயகுலன் வயது (19) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். சம்பவத்தையடுத்து ஹயஸ் வாகனச்சாரதி தப்பியோடியுள்ளார். (ந-6)

# 2011.04 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1804 - போர்த்துக்கலில் அப்பல்லோ என்ற கப்பல் மூழ்கியதில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

★1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜினியாவில் ரிச்மண்ட் நகரில் உணவுப் பற்றாக்குறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கும் அதிகமான பெண்கள் அமெரிக்க கூட்டமைப்பிற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

★1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு தலைவர் ஜெபர்சன் டேவிஸ் மற்றும் அவரது அமைச்சர்கள் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட்டை விட்டுப் புறப்பட்டனர்.

★1902 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது திரையரங்கு கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சலஸ் நகரில் திறக்கப்பட்டது.

★1902 - ரஷ்ய பேரரசின் உள்நாட்டமைச்சர் திமித்ரி சிப்பியாகின் சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் படுகொலை செய்யப்பட்டார்.

★1930 - ஹைலி செலசி எதியோப்பியாவின் மன்னராக முடி சூடினார்.

★1972 - நடிகர் சார்லி சப்ளின் 1950களில் கம்யூனிஸ்ட் என குற்றம் சாட்டப்பட்டபின்னர் முதற்தடவையாக ஐக்கிய அமெரிக்கா வந்தார்.

★1975 - வியட்நாம் போர்: குவாங் காய் மாநிலத்தினுள் வடக்கு வியட்நாம் படைகள் முன்னேறியதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் அம்மாநிலத்தில் இருந்து இடம்பெயர்ந்தனர்.

★1975 - கனடா, டொரொண்டோவில் சி.என் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 533.33 மீற்றர் உயரமான இக்கோபுரம் உலகில் மிக உயரமானதாகும்.

★1982 - போக்லாந்து தீவுகளை ஆர்ஜெண்டீனா முற்றுகையிட்டது.

★1983 - யாழ்ப்பாணம் அரச அதிபரின் செயலகத்தில் விடுதலைப் புலிகள் குண்டுத்தாக்குதல் நடத்தினர்.

★1984 - ராகேஷ் சர்மா சோயூஸ் வீ-11 விண்கலத்தில் பயணித்து, விண்வெளி சென்ற முதலாவது இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.

★2007 - சொலமன் தீவுகளுக்கு அண்மையில் கடலின் அடியில் இடம்பெற்ற நிலநடுக்கம் காரணமாக எழுந்த ஆழிப் பேரலை இத்தீவுகளில் பலத்த சேதத்தை உண்டுபண்ணியது. 8 பேர் வரையில் உயிரிழந்தனர்.

### பிறப்புகள்

★1862 - நிக்கொலஸ் பட்லர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1947)

★1881 - வ.வே.சு.ஐயர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1925)

★1978 - மே.இரா.கார்த்திகேயன்

★1981 - மைக்கல் கிளார்க், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

★1914 - போல் ஹெயிஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (பி. 1830)


★1928 - தியோடர் ரிச்சார்ட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியலாளர் (பி. 1868)

★2006 - பி.வி.பார்த்தசாரதி, குமுதம் இதழ் நிறுவுநர்



2007 - ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற பெரும் வெள்ளப்பெருக்கினால் 512 பேர் கொல்லப்பட்டனர்.

# ஏன் ஆனந்தமாக இல்லை?



## ஆன்மீகம் 12

### ஓராயிரம் பதிவுகள்

நீங்கள் குழந்தையாக இருந்த போது ஆனந்தமாகத்தான் இருந்தீர்கள் இதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த ஆனந்தப் பருவத்தில் சில விடயங்கள், பதிவுகள், நடவடிக்கைகள் சூழ்நிலைகள், உங்களைத் தாக்கியிருக்கும். இயற்கையாகவே குழந்தைகளிடம் ஆனந்தம் பொங்கிவழிந்தாலும் கூட அவர்கள் யாரும் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது. பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் தான் அப்போது அவர்கள் உள்ளனர்.

உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை வலியையும் வேதனையையும் தாங்கிக் கொள்ள முடியாமல் சோகத்துடன் காணப்படுவது வேறு விதமானது. ஆனால் ஆரோக்கியமான பல குழந்தைகள் சோகத்துடன் இருக்கிறார்கள். இது குழந்தையின் இயற்கையான சுபாவம் அல்ல. வாழ்வின் முன்னைய பதிவுகளின் பாதிப்புத்தான் இதற்குக் காரணம். உங்களைச் சுற்றி உள்ள மக்கள் ஏற்படுத்தும் சூழ்நிலையின் தாக்கம் உங்களிடையே ஒரு பதிவை உண்டாக்குகிறது.

மனிதனுக்குள்ளே அவனை சோகமாக வைத்திருக்கக்கூடிய பலவிதமான பதிவுகள் உள்ளன. அந்தநபர் இதை உணரும் வகையில் அது செயற்பட்டிருக்கலாம். அல்லது செயற்படாமல் இருந்திருக்கலாம். வெளிச் சூழ்நிலைகளோ அல்லது உங்கள் பதிவுகளோ எதுவோ ஒன்று உங்களைச் செயற்படத் தூண்டுகின்றது. என வைத்துக் கொள்ளுங்கள். செயற்படுவதும்அல்லது செயற்படாததும் உங்கள் விருப்பம்தான்.

போதுமான விழிப்புணர்வுடன் இருந்தால் நீங்கள் இத்தகைய பதிவுகளின் நிர்ப்பந்தத்தையும் தாண்டி சுதந்திரமாகச் செயற்பட்டு இன்னும் ஆனந்தத்துடன் இருக்க முடியும். ஏனென்றால் உங்களுடைய பதிவுகள் வெளிச்சூழ்நிலையில் இருந்து வந்தவை; ஆனால், உங்களது ஆனந் தம் அப்படியல்ல பதிவுகள் வரலாம்; போகலாம் ஆனால், ஆனந்தம் என்பது வந்து போகும் ஒன்றல்ல. அது உங்களுக்குள்ளே இருக்கும் வாழ் வாதாரம்.

இந்த வாழ்வாதாரமான ஆனந்தம் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்ள நீங்கள் அனுமதிக்கிறீர்களா? இல்லையா என்பதுதான் ஒரே கேள்வி. இந்த உலகில் ஆனந்தமில்லாதவர் எவருமே இல்லை. ஆனந்தம் இல்லாத முகங்கள், ஆனந்தமில்லாத உடல்கள், ஆனந்தமில்லாத மனங்கள் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் இந்த உலகில் ஆனந்தமில்லாத உயிர் என்று எதுவுமேயில்லை. ஒவ்வொரு உயிரும் ஆனந்தமான உயிரே.

ஆனால் உங்களது உடல், மனம் மற்றும் உணர்வுகளின் செயற்பாட்டில் நீங்கள் சிக்கிக்கொண்டால், நீங்கள் ஆனந்தமாக இல்லாமல் இருப்பதற்கும், துக்கமாக இருப்பதற்கும் இலட்சக் கணக்காண காரணங்களும் வழிவகைகளும் உலகத்தில் உண்டு. கடந்த காலத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவங்களை நினைத்துக் கொண்டிருந்தாலோ அல்லது வருங்காலத்தில் விரும்பத்தகாத விளைவுகளை தரும் செயல்களை இப்போது செய்து கொண்டிருந்தாலோ உங்களால் ஆனந்தமாக இருக்கமுடியாது. ஆனால் மக்கள் எப்போதும் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்; இல்லையா?

நீங்கள் துயரத்தில் மூழ்க வேண்டுமென்றால் யாரும் உங்களைக் கத்தியால் குத்தத் தேவையில்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு யாரோ ஒருவர் சொன்ன ஒரு சொல் போதும்... அதை நினைத்ததுமே நீங்கள் துக்கத்தில் மூழ்கிவிடுவீர்கள். மேலும் நாளை யாரோ, எதையோ சொல்லிவிடுவார்கள் என்ற பயமே இப்போது உங்களைத் துக்கத்தில் ஆழ்த்தக்கூடும். அல்லது நீங்கள் எதிர்பார்த்த ஏதோ ஒன்றை யாரோ உங்களிடம் சொல்லாமல் இருப்பதும் கூட உங்களைத் துக்கத்தில் ஆழ்த்துகிறது. உங்களைத் துக்கத்தில் ஆழ்த்த எண்ணற்ற பைத்தியக்காரத்தனமான வழிகள் உள்ளன. ஒரு குழந்தையாக நீங்கள் துயரமாக இருந்தீர்களா! அல்லது பெரியவராகித் துக்கமடைந்தீர்களா என்பது முக்கியமல்ல. சொல்லப் போனால் உலகில் பெரியவர்கள் யாரையும் நான் பார்க்கவில்லை. சிறிய உடலமைப்புக் கொண்ட குழந்தைகள் பெரிய உடலமைப்புக் கொண்ட குழந்தைகள்... இவர்களைத் தான் நான் பார்க்கிறேன்.

### அறியாமைதான் பேரின்பமா..?

அறியாமைதான் பேரின்பமென உங்களுக்கு எப்போதும் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மைதான்... வாழ்க்கையில் நீங்கள் அடிபடாதவரை வாழ்க்கை பேரானந்தமானதுதான். இப்போது நீங்கள் ஒரு உயரமான கட்டிடத்தின் மீது ஏறி, அங்கிருந்து கீழே குதித்தால் அது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா? சாதாரணமாகக் கீழே குதிப்பதே ஆனந்தம்தான். ஆனால் அந்த ஆனந்தம் தரையைத் தொடும்வரைதான். தரையில் மோதிய மறுகணம், தரைமீது ஒரு கறையாகிப்போவீர்கள். அவ்வளவு தான்... அதன்பின் உயிரும் இல்லை; ஆனந்தமும் இல்லை.

குதிப்பதில் எல்லையற்ற ஆனந்தம் மட்டுமே கிடைக்கிறது; தரைமீது மோதுவதால் எந்தப்பாதிப்பும் இல்லை என்கிற நிலை இருந்தால், ஒவ்வொரு மனிதனும் மிக உயரமான கட்டிடத்தின் மேலேறி, திரும்பத் திரும்பக் குதித்துக் கொண்டிருப்பான். ஏன் மக்கள் சரிவுகளில் உருளைச் சவாரி விளையாட்டில் ஈடுபடுகின்றார்கள்? கயிற்றில் தன்னைப் பிணைத்துக் கொண்டு உயரத்திலிருந்து ஏன் குதிக்கிறார்கள்? எதற்காக அவர்கள் பறக்கும் விமானத்திலிருந்து குதித்து, பரசூட்டை விரித்து வானில் மிதக்க விரும்புகிறார்கள்? ஏனென்றால், எந்தப் பின்விளைவும் இல்லாமல் பூமியை நோக்கிக் குதிப்பது என்பது மிக ஆனந்தமாக இருக்கிறது என்பதால்தான்!

நீங்கள் உயரமான கட்டிடத்தின் மீது நடந்தாலேபோதும்...அதுவும் ஆனந்தம்தான். அறியாமை என்பது பேரானந்தமானது, நீங்கள் தரையில் மோதி விழும்வரை! ஆக, முட்டாள்கள் கூட ஆனந்தமாக இருக்க முடியும்; வாழ்வு அவர்களைத் தொடும்வரை. பெரும்பாலும் வாழ்வு யாரையும் அப்படியே விட்டுவைப்பதில்லை! அப்படியே வாழ்வு விட்டுவைத்தாலும் மரணம் யாரையுமே விடுவதில்லை.

பிறப்போடும் இறப்போடும் தொடர்புடைய ஆனந்தத்தைப்பற்றி நான் இங்கு பேசவில்லை. பிறப்பாலும் இறப்பாலும்கூட பாதிக்கப்படாத ஆனந்தத்தின் வேறு ஒரு பரிமாணத்தைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

---

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்-ஒரு நோக்கு

03

### 19 ஆம் நூற்றாண்டில்

சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் நீதிப் பாடல்களின் தோற்றத்தைத் தொடர்ந்து இயற்கைக் காட்சிகள், பறவைகள், பிராணிகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றனவற்றைப் பாடுபொருளாக்கிப் பாடல்கள் பல உருவாகின. இதனைச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் நான்காம் படிநிலை எனக்கூறுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவக் கவிஞர் எச்.ஏ.கிருஸ்ண பிள்ளை 184வரிகள் கொண்ட "பால்யப் பிரார்த் தனை" என்னும் சிறுவர்நூல் ஒன்றை இயற்றியுள்ளார். இயேசு பெருமானைப் போற்றித் துதிக்கும் வகையில் அமைந்தது இந்நூல். அதில் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

"பத்தியாய்ச் செபம் பண்ணவே  
சுத்தமாய்த் தெரியாதய்யா  
புத்தியோடு உம்மைப் போற்ற- நற்  
சித்தமீந்திடும் இயேசுவே"

சிறுவன் ஒருவன் இயேசு பிரானிடம் வேண்டுதல் செய்வதனை இப்பாடல் நன்கு விளக்குகிறது. 1986 ஆம் ஆண்டில் ஈழத்தவரான தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் "பால்யக் கும்மி" என்னும் சிறுவர்க்கான பாடல்நூலை வெளியிட்டுள்ளார். இதுவே ஈழத்திலும் தமிழகத்திலும் முதன்முதலில் வெளியான சிறுவர் பாடலாகும்.

### இருபதாம் நூற்றாண்டில்

இருபதாம் நூற்றாண்டு, சிறுவர் இலக்கியம் வளம்பெற்ற காலம் எனலாம். சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள், சிறுவர் நாடகங்கள், சிறுவர்சஞ்சிகைகள், சிறுவர்க்கான திரைப்படங்கள் அனைத் தும் வெளிவந்தகாலம் இதுவாகும். இருபதாம் நூற்றாண்டைப் பொறுத் தவரையில் தமிழகத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடியாக விளங் கியவர் கவிமணி சி.தேசிகவிநாயகம் பிள்ளை ஆவார். அவரே 1901 இல் சிறுவர் பாடல் எழுதத்தொடங்கினார். அவரின் பின் மகாகவி

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

சுப்பிரமணிய பாரதியார் 1915இல் பாப்பாப் பாட்டை எழுதி ஞானபானு என்னும் இதழில் வெளியிட்டார். பாரதியா ருக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே கவிமணி சிறுவர் பாடல் எழுதிவிட்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.சிறுவர் இலக்கிய வளர்ச் சியில் ஐந்தாம் படிநிலையாக 20ஆம் நூற்றாண்டில் எழுந்த சிறுவர் பாடல் களைக் கொள்ளலாம். கவிமணியைத் தொடர்ந்து பாரதியார், பாரதிதாசன், சந்தானபாரதியார், வாணிதாசன், தமிழ்ஒளி, கா.நமச்சிவாயமுதலியார், மணிதிருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து, அ.கி.பரந்தாமனார், அழ.வள்ளி யப்பா, ர.அய்யாச்சாமி, பூவண்ணன், செல்வகணபதி, திருச்சிபாரதன், மதிஒளி, தமிழ்முடி, லெமன், நாரா, நாச்சியப்பன், ரா.பொன்ராசன், குழ-கதி ரேசன், ஆலந்தூர் மோகனரங்கன் முதலா னோர் அருமையான சிறுவர்கள் பாடல்களைப் படைத்துள்ளனர். சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஆறாம் படிநிலையாக அமைவது கதைப்பாடல்களும் மொழி பெயர்ப்புப் பாடல்களும் ஆகும். அழ-வள்ளியப்பா,கவிமணி போன்றோர் இத்துறையில் முத்திரை பொறித்துள்ளனர் எனலாம்.சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஏழாம் படிநிலையாக இசைப்பாடல்கள், கீர்த்தனைகள் என்பனவற்றைக் கொள்ளலாம். பாவேந்தர் பாரதி தாசன், கவிமணி பெ.தூரன் போன் றோர் இத்துறையில் வழிகாட்டியுள்ளனர்.

சிறுவர் இலக்கியவளர்ச்சியின் எட்டாம் படிநிலையாக அமைவது சிறுவர் நாடகங்களாகும் 20ஆம் நூற்றாண்டில் சிறுவர் நாடகநூல்கள் பல தமிழகத்திலும் ஈழத்திலும் வெளிவந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த திரைப்படங்களில் சிறுவர்க்கேற்ற அருமையான பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. அவற்றைத் திரைப்படப் பாடல்களென நாம் ஒதுக்கிவிடமுடியாது. இவற்றையும் சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் ஒரு படிநிலையாகவே (ஒன்பதாம் படிநிலை) நலம் கொள்ளுதல் வேண்டும். இந்தவகையில் பாவேந்தர் பாரதிதாசனாரின்

"தலைவாரிப் பூச்சூடி உன்னை..."

என்னும் பாடல் நெஞ்சம் கவர்ந்த பாடலாகப் பரிமளிக்கின்றது.

"கண்ணே பாப்பா..."

"மிட்டாய் வாங்கக் கடைக்குச் செல்லலாம்..."

"சொல்லுபாப்பாநீ சொல்லு பாப்பா..."

"அம்மாவும் நீயே அப்பாவும் நீயே..."

"சிரித்துவாழவேண்டும் பிறர் சிரிக்கவாழ்ந்திடாதே..."

"நல்ல பேரை வாங்கவேண்டும் பிள்ளைகளே..."

இவ்வாறான பாடல்கள் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு திரைப் படங்கள் வழங்கிய முக்கியத்துவம் என்றே கூறவேண்டும்.

சிறுவர் காவியங்கள் சிறுவர்களுக்கான பாடல்கள் கொண்ட ஒலிப் பேழைகள் போன்றனவும் இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்துள்ளன. இவற்றையெல்லாம் சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் பத்தாம் படிநிலையாகக் கொள்ளலாம். மேற்கூறிய பத்தையும் பத்துப்படிநிலையாகக் கொள்ளலாம். மேற்கூறிய பத்து படிநிலைகளிலும் வைத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியை மதிப்பிடுவது சிறுவர் இலக்கிய ஆய்வாளர்களின் பணியாகும்.

த. துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்)

(தொடரும்)

# காரைநகர்-மணற்காடு திருவருள் மிகு தேவி கும்பநாயகி முத்துமாரியம்பாள் ஆலய

# தேர்த்திருவிழா சிறப்புமலர்-2011.04.02

## நல்லை ஆதீன முதல்வரின் நல்லாசிகள்



ஈழத் திருநாட்டின் வடபால் யாழ்ப் பாணத்தின் திலகமென துலங்கும் காரை நாகர்-மணற்காடு எனும் திவ்ய திருத்தலத் திலே எழுந்தருளியிருக்கும் அம்பாள் கும்ப நாயகி ஸ்ரீமுத்துமாரி என்ற நாமத்துடன் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாய் அருள்பாலித்து வருகின்றாள்.

அம்பாளின் மஹோற்சவப் பெருவிழாக் களில் தேர் உற்சவம் இன்றாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்கிவரும் காரைநகரிலே வாழ்கின்ற மக்கள் அம்பாளின் திருவருள் சிறப்பினாலே நல்ல வண்ணம் வாழும் பேற்றினை பெற்றுள்ளனர்.

அகிலமெங்கும் வாழும் அனைவரும் நல்லவண்ணம் வாழ தேரேறி அருள்பாலிக்கும் அம்பாளை பிரார்த்தித்து ஆசி கூறு கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## மஹோற்சவ கால பிரதமகுருவின் அருளாசியுரை




பிரபஞ்சத்தின் உற்பத்திக்குக் காரண மான மகாசக்தியாக அன்னை மூவுலகிலும் வியாபித்திருக்கின்ற அனைத்து ஜீவராசி களும் உய்யும் பொருட்டு முப்பத்திரெண்டு அறங்களையும் தோற்றுவித்தவள். அவ் வறங்களின் ஊடாக ஆசைக் கடலுள் அகப்பட்டு அருளற்று அலமந்து திரிகின்ற ஆன்மாக்களுக்கு அருட்சுகம் ஈந்து ஆன் மீக உணர்வில் ஆற்றுப்படுத்தி வாழ் விப்பவள்.

அத்தகு சக்திதான் இன்று தேரேறி திருப்பவனி வந்து அருள் செய்கின்றாள். வேண்டுவோர் வேண்டும் வரமெல்லாம் தந்து வாழ்விக்கின்றாள். அவளின் கருணை அளவிடற்பாலது. எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க எனது நல்லாசிகளை தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

வேதாகம கிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு
ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்த சிவாச்சாரியார்.





### தேரேறி அருள்தர வருக! வருக!

தங்க நிறச் சுந்தரியே தேரேறி வருக!
தமிழ் விஞ்சும் அம்பிகையே தேரேறி வருக!
அங்க மெல்லாம் அரவணித்தவளே தேரேறி வருக!
ஆதியது பாதியென தாயே! தேரேறி வருக!
குங்குமப் பொட்டோடு தேவி தேரேறி வருக!
குமிண் சிரிப்போடு அம்மா தேரேறி வருக!
சிங்கமதிலமர்ந்தே கும்பநாயகியே தேரேறி வருக!
சிறப்பெல்லாம் தந்தருள தாயே தேரேறி வருக!

செல்வி கலாநிதி அருளானந்தன்

## தேவஸ்தான பிரதமகுருவின் அருளாசியுரை




ஆனந்தமாய், அறிவாய், அமுதமாய் இன்பம் தருபவள்தாய். அவளே காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியம் மனாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றாள். பக்தியோடு தொழுபவர்க்கு எல்லா நலன்க ளையும் அருள்பவள் அவளே!

அவளின் திருப்பாதங்களை பூசிப்பதற்கு பரம்பரை பரம்பரையாக எனக்கும் ஒரு வரத்தை தந்திருக்கின்றாள். இத்தகு பெருமை மிகு சக்தி பேரருள் வடிவத்தில் திருத்தேரில் பவனிவந்து எல்லோருக் கும் நல்லருள் செய்கின்றாள். அவளைப் பணிந்து அவனியில் நலம் பெற்று வாழ்வோமாக.

தேவஸ்தானபிரதமகுரு, தேவி உபாசகர்
சிவப்பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்தக் சிவாச்சாரியார்,
மணற்காடு முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.

## தேவி கும்பநாயகியின் தேரோட்டம் காணவாரீர்!



யாதெரு தெய்வங்கொண்டீர், அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவர் என்பது சித்தாந்த தத்துவம். பல பந்தங்களை ஆன்மாவிடத்தே பதியவிடாமல் சிவசம் பந்தமுறும் படியாக ஆன்மாவைத் திருவருள் செய்து உய் விக்கும் அருட்டிறத்தினைச் சக்தி தத்துவம் என்று விளக்கம் செய்வர்.

கருணை புரிவதிலும், குற்றங்களை மன்னிப்பதிலும், அன்புகாட்டி வளர்ப்பதிலும் தந்தையைவிட ஒருபடி மேலானவள் தாய். எனவே அவளை வணங்கி, அருள்பெற்று அவள் மூல மாகச் சிவனை அடைய வேண்டும். ***எழுதா எழில் உயிர்ச் சித்திரம்*** ஆகியவள் வள்ளலார் வணங்கிய மாணிக்கவல்லி.

"அம்மா! முருகனுக்கு வேல் தந்தாய், சிவபெருமான் அம்மியின் மீது வைக்கக் கால் தந்தாய்! சம்பந்தருக்கு பால் தந்தாய், காமனக்கு மூவரும் அஞ்சக் கோல் தந்தாய் எனக்கென்ன தந்தாய்" என்று கேட்டு கீழ்வருமாறு பாடியுள்ளமை காணத்தக்கது.

"வேல் கொடுத்தாய் திருச் செந்தூரர்க்கு
அம்மியின் மீது வைக்க
கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்கு
கவுணியர்க்கு
பால் கொடுத்தாய் மதவேளுக்கு
மூவர் பயப்படச் செங்
கோல் கொடுத்தாய் அம்மையே
எனக்கேதும் கொடுத்திலையே"

என பெறற்கரிய நிலையில் தாயின் பேரருள்திறம் பலவாம். இத்தகு பெருமை கொண்ட சக்தி அன்னைவடிவம் தாங்கி காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி எனும் நாமம்பூண்டு எம்மையெல்லாம் அரவணைத்து காவல் செய்து வருகின்றாள். இன்று (2011.04.02) சனிக்கிழமை அழகிய சித்திரத்தேரேறி அருள்பாலிக்கின்றாள். எவர் என்னவரம் கேட்டாலும் இல்லையென்னாது அருளும் அம்பிகை அவள். அப்பெரும் மகாசக்தி திருத்தேரில் ஆரோகணித்து வருகின்ற காட்சி தேவலோக இந்திர விழாப்போல அமைந்து வருகின்றது.

தேரோட்டம் மனித வாழ்க்கைக்கு ஒப்பானது. தேரினுடைய வடிவத்தை சிந்திக்கின்ற பொழுது சுவாலித்து எரியும் அக்கினியின் வடிவமாக காட்சியளிக்கிறது. அக்கினி அழித்தல் தொழிலை செய்கின்றது. அதன் தத்துவத்தை உணர்த்துவதே தேர்த்திருவிழாவாகும். ஆன்மாக்களின் மலங்களை போக்கி தீமைகளை அழித்து நல்லருட்பேற்றினை அருள அன்னை தேரேறி வருகிறாள். அவளின் திருவருளைவியந்து அவள் தாள் பணிவோமாக.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்
வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்,
ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி.
பணிப்பாளர் ,சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்.

**மலரமைப்பு: சங்குநாதன்**

**மணற்காடு மாரியின் தேர்விழா சிறக்க பிரார்த்திப்பவர்கள்**


ரூபா பன்முக வர்த்தகம்
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மலர் ரெக்ஸ்டைல்ஸ்
இல. 18, பெரிய கடை (67A),
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2791

யாழ். காலணியகம்
YARL TRADES CENTRE
Agents for: Bata
11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
இல.17, 18, 18A, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3152

DHL WORLDWIDE EXPRESS
உள்நாட்டு, வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் DVD பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
தற்பொழுது 24 மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள், பொதிகள் சேவை (சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்து)
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு, வெளிநாட்டுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
திருமுருகன் கொம்நெற்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1 Kg 400/- ரூபாவீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1 Kg பொதிகளுக்கு 500/- ரூபா வரையான விசேட சலுகை
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo-06
259, கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P:2227835 (ஓல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ. சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி (ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்.

பசுவதை ஒழிப்போம்
தேனு களஞ்சியம்
இல.29, நவீன சந்தை உட்புறம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.





சரவணா ரெக்ஸ்
சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவுகளில் முழு குடும்பத்துக்கும் ஏற்ற ஆடைகளைப் பெற்றுக்கொள்ள
நல்லூர் சரவணா ரெக்ஸ்
தனது இரண்டாவது கிளையான 770, 772, கே.கே.எஸ். வீதி (தட்டா தெரு சந்தி), யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.
கிளை I
326, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 021 222 1723
கிளை II
770, 772, கே.கே.எஸ். வீதி, (தட்டா தெரு சந்தி) யாழ்ப்பாணம். 021 222 0421







லக்ஷ்மி ரேடர்ஸ்
316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8628

# வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான மின்விநியோகத் திட்டத்திற்கு ஜப்பான் கடனுதவி

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை மின்விநியோகத்தைச் சீர்படுத்துவதற்கு ஆயிரத்து 891 மில்லியன் ரூபாயை ஜப்பானிடமிருந்து கடனுதவியாகப் பெற அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் இந்த கடனுதவியின் மூலம் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை மின்விநியோகத்தைப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் அதற்கான உபமின் நிலையத்தை கிளிநொச்சியில் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான 132 கிலோ வோல்ற் மின்னிணைப்புத் தொகுதி யுத்தம் காரணமாகச் சேதமடைந்தது. இதனை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முடிவில் வட பகுதிக்கு முழுமையான மின்சார வசதி அளிக்கப்படும்.


இதேவேளை சீன அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கடனுதவி பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பிரதான வீதிகளைப் புனரமைப்பதற்காக சீன அரசிடமிருந்து 500 மில்லியன் டொலர் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு புதிய நரம்பியல் சிகிச்சைப் பிரிவு

## சவுதி அபிவிருத்தி நிதியம் உதவி



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட 10 மாடிகளைக் கொண்ட புதிய நரம்பியல் சிகிச்சைப் பிரிவைத் திறந்துவைத்துள்ளார்.

இந்நிகழ்வின்போது இதற்கு நிதியுதவி வழங்கிய சவுதி அபிவிருத்தி நிதியத்தின் முகாமையாளர் யூசுப் அல் பசாமுக்கு ஜனாதிபதி நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கியுள்ளார்.

இலங்கையிலுள்ள சவுதி தூதுவர் அப்துல் அசீஸ் அல்-ஜமால் மற்றும் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமால் சிறிபால டி சில்வா, ஏ.எச்.எம்.பௌசி, தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஹெக்டர் வீரசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

வட்டுக்கோட்டை அடைக்கம் தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறும்.

(ஸ்ரீ-2)

# இணையத்தள வடிவமைப்பு போட்டியின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவ பல்கலைக்கழக உள்ளூர்மயமாக்கப்பட்ட செயலிகளுக்கான சிறப்பு மையமும் மற்றும் ஆட்கள மையமும் இணைந்து வழங்கும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான இணையத்தள வடிவமைப்புப் போட்டி – 2011 இன் பரிசளிப்பு விழா எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து 3.30 மணிவரை யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறும். (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாட்டு காலத்தை நீடிப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் காலத்தை மேலும் மூன்று மாதங்களினால் நீடிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இது தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் சார்பில் அரசாங்கத்திடம் இதுவரை கோரிக்கை விடுக்கப்பட்டதா? என்ற விடயம் உறுதிப்படுத்தப்படாமல் உள்ளதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் காலத்தை ஒரு வருடத்தினால் நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளிவந்தன.

ஆனால், அவ்வாறு நீடிப்புக்கோரிக்கையை ஆணைக்குழுவின் சார்பில் முன்வைக்கவில்லை என ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது அதன் சேவைக் காலத்தை மேலும் மூன்று மாதங்களினால் நீடிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவித்தன.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தனது இறுதிப் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களிலும் கொழும்பிலும் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றுள்ள நிலையில் இறுதி பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைத் தயாரிக்கும் நோக்கில் பெறப்பட்ட சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. (ஸ்ரீ-2)

# மயக்க மருந்து கலந்த மென்பானம் வழங்கி பயணிகளிடம் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வெலிமடை நோக்கி தனியார் பேருந்தில் பயணம் செய்த இரு நபர்கள் அப்பேருந்தில் பயணித்த நான்கு இளைஞர்களுக்கு மயக்க மருந்து கலந்து மென்பானத்தை வழங்கி இளைஞர்களின் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி தெரிய வருவதாவது,

கடந்த 29ஆம் திகதி இரவு கொழும்பில் இருந்து வெலிமடைக்கு புறப்பட்ட தனியார் பேருந்து வண்டியில் பயணித்த நான்கு இளைஞர்களும் அருகில் மேலும் இருந்த இருவரது கையடக்கத் தொலைபேசியில் கிரிக்கெட் போட்டியைப் பார்த்து ரசித்தவாறு இருந்துள்ளனர்.

சுமார் அரைமணி நேரத்தின் பின்பு கையடக்கத் தொலைபேசியை நிறுத்திவிட்டுத் தமது பையில் இருந்த மென்பானங்களை அருந்தியுள்ளனர்.

இவர்கள் பானம் அருந்திய பின்பு தமக்கு அருகில் அமர்ந்திருந்த நான்கு இளைஞர்களுக்கும் மென்பான போத்தல்கள் நான்கை வழங்கியுள்ளனர். இந்த இளைஞர்களும் மென்பானத்தை குடித்துள்ளனர். இதனை தொடர்ந்து அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்பு இவ்விரு நபர்களும் நான்கு இளைஞர்களினதும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பணத்தைச் சுருட்டிக் கொண்டு பேருந்தில் இருந்து இறங்கியுள்ளனர்.

பின்பு நடத்துநர் மயக்கமடைந்த நால்வரையும் கண்டு அவர்களை கம்பளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)


union assurance
Trust in your tomorrow, today.

வேலைவாய்ப்பு

Join us as an Insurance Adviser to experience what you hoped for...
රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු...
உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- திங்கட்கிழமை - 04.04.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2841)

திருமதி ச.சுகன்யா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 077 3668851

# உள்ளூராட்சி சபைகளின் வரவு-செலவுத்திட்டம் தோல்வியுற்றால் தலைவர் பதவி பறிக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் வரவு- செலவுத்திட்டம் தோல்வியுற்றால் அதன் தலைவர் அல்லது நகராதிபதியின் பதவி பறிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் ஹொரணை நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கான பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது சிரேஷ்ட அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களின் வரவு- செலவுத்திட்டம் தோல்வியடையும் பட்சத்தில் அதன் தலைவர் மற்றும் நகராதிபதிகளின் பதவியைகப் பறிப்பதற்கு ஏதுவான வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட மூலத்தில் திருத்தம் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பல உள்ளூராட்சி மன்றங்களின் வரவு -செலவுத்திட்டங்கள் தோல்வியடைந்திருந்தன. அவ்வாறு எதிர்வரும் காலங்களில் இடம்பெறாது இருக்கும் வகையில் அரசாங்கம் புதிய சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் தலைவர் மற்றும் நகராதிபதிகளை நெருக்கடிக்குள் வைத்திருக்க விரும்புவதையே அமைச்சர் விக்கிரமநாயக்கவின் கூற்று புலப்படுத்துகின்றது. (ஸ்ரீ-2)

# புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு 200மில்.ரூபாய் செலவு

## சிறைச்சாலைகள் அமைச்சர் தெரிவிப்பு


(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக 200 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளதாக சிறைச்சாலை மற்றும் புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிப்பை மேற்கொள்வதற்காக மாதாந்தம் 50 மில்லியன் ரூபாய்கள் செலவாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் அரசாங்கத்திடம் சரணடைந்த 11 ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களில் இன்னும் நான்காயிரம் போராளிகளுக்கு மாத்திரமே புனர்வாழ்வளிக்க வேண்டி இருப்பதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## இராமநாதன் புஸ்பராஜலிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் தியேட்டர் லேன், இணுவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய இராமநாதன்-புஸ்பராஜலிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் இராமநாதன் இரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் சுந்தரலீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் புஸ்யோகேந்திரி, காலஞ்சென்ற புஸ்பயோகேந்திரன் மற்றும் புஸ்பராணி, குகேந்திரன், சங்கரநாதன், காலஞ்சென்ற உருத்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரதீஸ்வரன், ரஜந்தி, இரத்தினா, பிருந்தா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துளசி, ஞானச்சந்திரன், செல்வரஞ்சிதகுமார், கண்ணப்பன், சுரேகா ஆகியோரின் அன்பு மாமனும் திவ்வியா, தரண்யா, ஹரினி, காலஞ்சென்ற பூர்வஜன் மற்றும் ஸ்ரீவர்ஷன், ஜீவகன், ஷாளினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 3A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13 (3A Wolfendhal Lane) இல் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, அதன்பின்னர் பூதவுடல் பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன்-பிரதீஸ்வரன்
தொ.பே: 077 5074150,
011 5646835

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(ஸ்ரீ-2618)

5 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

# யாழ்ப்பாணம்...

## முழு மாணவர்களின் பெறுபேறுகள்

| பாடம் | No. Applied | No. SAT | FIRST SITTING A | B | C | S | W | % passed |
|---|---|---|---|---|---|---|---|---|
| SAIVAISM | 211 | 211 | 199 | 07 | 05 | - | - | 100 |
| R.C | 04 | 04 | 04 | - | - | - | - | 100 |
| NON R.C | 02 | 02 | - | 02 | - | - | - | 100 |
| TAMIL LANG & LIT | 217 | 217 | 121 | 56 | 40 | - | - | 100 |
| ENGLISH | 217 | 217 | 91 | 35 | 55 | 33 | 03 | 98.6 |
| SCIENCE & TECH | 217 | 217 | 97 | 46 | 63 | 11 | - | 100 |
| MATHS | 217 | 217 | 181 | 19 | 16 | 01 | - | 100 |
| HISTQRY | 217 | 217 | 79 | 42 | 79 | 17 | - | 100 |
| ART | 13 | 13 | 03 | 04 | 05 | 01 | - | 100 |
| MUSIC | 13 | 13 | 04 | 05 | 03 | 01 | - | 100 |
| DANCE | - | - | - | - | - | - | - | - |
| ENGLISH LIT | 61 | 61 | 07 | 12 | 19 | 20 | 03 | 95.1 |
| TAMIL LIT | 80 | 80 | 26 | 24 | 20 | 06 | 04 | 95 |
| DRAMA & THEATRE | 47 | 47 | 07 | 24 | 16 | - | - | 100 |
| GEOGRAPHY | 15 | 15 | 12 | 02 | 01 | - | - | 100 |
| DEVELOPMENT ST. | - | - | - | - | - | - | - | - |
| COMM.& ACC. | 183 | 183 | 85 | 35 | 44 | 17 | 02 | 99 |
| CITIZENSHIP | 19 | 19 | 14 | - | 44 | 01 | - | 100 |
| AGRICULTURE | - | - | - | - | - | - | - | 1- |
| HOME SCIENCE | - | - | - | - | - | - | - | - |
| INFORM.TECHNO | 175 | 175 | 56 | 41 | 55 | 22 | 01 | 99.4 |
| HYG & PHY.ED. | 39 | 39 | 10 | 20 | 09 | - | - | 100 |
| DESIGNING TECHNOLOGY | 03 | 03 | - | 02 | 01 | - | - | 100 |

புலமைப் பரீட்சைக்குத்தோற்றி 6 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர். இந்த 6 ஆண்டுகள் மிகவும் நீடித்தகாலம். இக்காலத்தில் மாணவர்கள் அதிபரால், ஆசிரியர்களால் சரியாக வழிநடத்தப்படாதிருந்தாலும் கல்லூரியில் சரியான கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறாதிருந்தால் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்க முடியாது.

இந்துக்கல்லூரியில் சிறந்த கல்விப் பாரம்பரியமும், அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையுமே பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப்பெற உதவுகின்றன. சமூக, பொருளாதர ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன்களை கல்லூரி நன்கு கவனித்து வருவதனாலும் உதவிகள் கொடுக்கப்படுவதனாலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக அமைகின்றன. இத்தகைய உதவிகளும் , அதிபர், ஆசிரியர்களின் செயற்பாடுகளும் வறிய, பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட மற்றும் மெல்லக் கற்கும் மாணவர்களும் கல்வியில் முன்னேற பரீட்சைகளில் சிறப்பாக செய்யக்கூடிய சூழ்நிலை பாடசாலையில் நிலவுகின்றது.

இக்கல்லூரியின் கல்விச் செயற்பாட்டை மேலும் சிறப்புற முன்னெடுப்பதற்கு பெரும் தடையாக இருப்பது கற்றல் செயற்பாட்டிற்கு போதுமான உத்தம (ideal) வகுப்பறைகள் இன்மையாகும். கல்லூரி வகுப்பறைக் கட்டிடங்கள் நெருக்கமாவும் வகுப்பறைகள் சிறிதாகவோ, பொருத்தமில்லாத அமைப்பிலோ இருப்பதும் வகுப்புகளில் மிகக்கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் இருப்பதும் சிறப்பான கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் பெரும் குறையாக இருக்கின்றன. மேலும் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகள் கொண்ட வகுப்பறைகள் அமைக்கப்படுவது இன்றைய தேவை ஆகும்.

க.பொ.த (சா/த) பரீட்சையில் கடந்த மூன்று வருடங்களாக 100% சித்தியைப்பெற்ற மாணவர்களையும் இதற்குப் பின்புலமாக நின்று உழைத்த கல்லூரி அதிபர் திரு.ப. கணேசராஜா, பிரதி அதிபர்கள் , ஆசிரியர்கள் மற்றும் இந்துக்கல்லூரி சமூகத்தினரும் பாராட்டிற்குரியவர்கள். இனிவரும் காலங்களில் இன்று பெற்ற பெறுபேறுகளிலும் பார்க்க கூடிய பெறுபேறுகளை இந்துக்கல்லூரி மாணவர்கள் பெறவேண்டும் என்பதே யாவரதும் விருப்பம் ஆகும்.

# கட்டாரில் இலங்கை பெண்ணுக்கு ஒருவருட சிறை

கட்டாரில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் புரிந்த இலங்கைப் பெண்ணொருவருக்கு 11 ஆயிரம் கட்டார் றியால்களை திருடிய குற்றச்சாட்டு காரணமாக ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அப்பெண் பணியாற்றிய வீட்டு எஜமானி கட்டார் பொலிஸாரிடம் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

தனது கைப்பையிலிருந்து இப்பணத்தை பணிப்பெண் திருடியதாகவும் கடந்த வருடம் மார்ச் 6 ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றதாகவும் இம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பணிப்பெண்ணின் அறையிலிருந்து 8 ஆயிரம் றியால்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

39 வயதான இப்பணிப்பெண் குறித்த வீட்டில் தொழில் பெற்றுச் சென்று ஒருமாத காலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது. தன் மீதான குற்றச்சாட்டை மறுத்த பணிப்பெண் குப்பையிலிருந்து பணப்பையை கண்டெடுத்ததாக தெரிவித்தார்.

எனினும், வீட்டு உரிமையாளரின் முறைப்பாடு நம்பகமானது என கண்டறிந்த டோஹா நீதிமன்றம் மேற்படி பணிப்பெண்ணுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்ததுடன் தண்டனை முடிந்தவுடன் அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிட்டது. (ஸ்ரீ-2)

# க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

அ.கீர்த்திகா(8ஏபி), பு.ஜெனசி(8ஏபி), க.புஸ்பவேணி (6ஏ2பிசி), ப.தர்சனா (6ஏ2 பிசி), ம.கார்த்தீபன் (6ஏபி2சி), த.அருட்கரன் (5ஏ2பிசி), க.இதயந்தனன் (5ஏ2பிசி), த.கஜயந்தினி (4ஏ2பி3சி), பா.மதுரியன் (4ஏ2பி2சிஎஸ்),செ.கீர்த்தனா (4ஏ5சி), இ.கோபிகா (3ஏ2பி3சிஎஸ்), யோ.கார்த்திகா (3ஏபி4சிஎஸ்), வ.சதுர்சன் (3ஏபி5சி), அ.கிருபரூபன் (3ஏபி4சிஎஸ்), த.மதுரா (3ஏ5பிசி). (ஸ்ரீ-2)

# 1 ஆம் ஆண்டு நினைவாக

அமரர் திருமதி

## பிரபாகரன் பிறேமலோஜினி



**மண்மகிழ்**
**30.08.1982**

**கண்நெகிழ**
**13.04.2010**

அக்கினித் தாயின் மடியினிலே
நீயும் தவழ்ந்து ஆனதம்மா
ஆண்டுகள் ஒன்று
அருகில் இருந்து பார்த்த நிலையம்மா
நாமும் மறப்போமா
கைபிடித்த காளையும் கலங்கியழ
பால்குடித்த பிள்ளைகளும் பதறியழ
பெற்றவர்கள் துடிதுடிக்க-உன்
உடன் பிறப்புகள் பதைபதைக்க
உற்றவர்கள் ஊரவர்கள்
உடன் பிறவா சகோதரர்கள்
எல்லோரும் கலங்கி நிற்க
எங்கு சென்றாயோ...

(சி-2849)

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

**குடும்பத்தினர்.**

(3937)

# மரண அறிவித்தல்

## திருமதி பவளம் நாகமணி



(428)

வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், 70/11, சொலமன் லேன், பழையபூங்கா வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் நாகமணி நேற்று முன்தினம் (31.03.2011) வியாழக்கிழமை காலையில் இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. சின்னத்தம்பி நாகமணியின் (உரிமையாளர், நாகமணி ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும், தணிகாசலம், பரிமளகாந்தி, கனகமலர், அமிர்தநாயகம் (பிரான்ஸ்), இராசநாயகம் (கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம்), தர்மநாயகம் (லண்டன்), யோகராணி (ஆசிரியை,யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), டெய்சிராணி (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம்), காலஞ்சென்ற நவநாயகம் மற்றும் பிரபாகரன் (உரிமையாளர், நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலா, வேதநாயகம் (ஓய்வுபெற்ற வ.பி.போ.ச. உத்தியோகத்தர்), ரகுநாதன்(உரிமையாளர், லக்ஸி தச்சுத் தொழிற்சாலை), சித்திரா (பிரான்ஸ்), ஜெயலக்சுமி (விரிவுரையாளர், கல்வியியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அமுதா (லண்டன்), விமலாம்பிகைபாகன்(பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), நாகேந்திரன் (பரீட்சைக்கிளை, யாழ்.பல்கலைக்கழகம்), பாமினி ஆகியோரின் அன்புமாமியும், கஜிதா (லண்டன்), தாரணி (கோப்பாய் கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை மாணவி), தபேந்திரன் (சமூக சேவைகள் அலுவலர், பிரதேச செயலகம், கோப்பாய்), இளங்கோவன்(சுவீடன்), திருமாறன்(சுவீடன்), வசந்தன் (சுவீடன்), காயத்திரி (சுவீடன்), அர்ச்சனா, தட்ஷாயினி (ஆசிரியை, கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்), பகீரதன் (பிரான்ஸ்), டிலக்ஷனா, அபர்ணா (பிரான்ஸ்),அனோஜ் (பிரான்ஸ்),ரவிசங்கரன், ஜெயசுமங்கலா, லாவண்யா, மனோசங்கரன், நகோமி தெய்வீகா (லண்டன்), திமோத்தி செந்தூரன் (லண்டன்), சாம்சன் அருணோதயன் (லண்டன்), சங்கீதன், திவாகரன், கீர்த்தனா, யசோதரன், அபிலாசனன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், இலக்கியன், இந்துயன், ஆரங்கன்(சுவீடன்), அபினாஷ் (சுவீடன்), வைஷாலி (லண்டன்),காவ்யா ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (02.04.2011) இன்று சனிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70/11, சொலமன் லேன்,**
**பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 3450**
**021 222 5539**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

எந்தப் பழக்கத்தையும் யன்னல் வழியாக தூக்கி எறிந்துவிட முடியாது. கையைப் பிடித்துப் படிப்படியாக இறக்கி அழைத்துப் போய்த்தான் வெளியேற்ற வேண்டும். – –மார்க் ட்வெய்ன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பெரிய பலாப்பழங்கள் இருக்க ரம்புட்டான் பழங்கள் அகப்பட்டன

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பகிடிவதையில் ஈடுபட்ட பதினைந்து மாணவர்களை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய சம்பவம் அண்மையில் இடம்பெற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தில் ராக்கிங்கில் ஈடுபட்ட மாணவர்களை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமை இதுவே முதற் தடவை எனலாம்.

அதேநேரம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ராக்கிங் சம்பவங்கள் மிகவும் சொற்பமானவை. இருந்தும் அந்த மாணவர்களே அகப்பட்டுள்ளனர்.

பரவாயில்லை, இனிமேல் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 'ராக்கிங்' என்ற 'மனவடு' நோயிலிருந்து முழுமையாக விடுபடுவர் என்று நம்பலாம்.

அதேநேரம் ஐயா! மிகப்பெரிய பலாப்பழம் இருக்க ரம்புட்டான் பழத்தை அல்லவோ நீங்கள் கைதுசெய்திருக்கிறீர்கள் என்று கூறுபவர்களின் ஆதங்கத்தையும் தூக்கி எறிந்துவிட முடியாது.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிடையே மிக மோசமான முறையில் ராக்கிங் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

ராக்கிங் என்பதில் யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர்கள் அனைவரும் ஈடுபடுவதில்லை. எனினும் ஒருபகுதி மாணவர்கள் ஈடுபடுகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இவ்வாறு ராக்கிங்கில் ஈடுபடுபவர்களில் சிலர் மிக மோசமாக நடந்துகொள்கின்றனர்.

எனவே அத்தகையவர்களையும் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ராக்கிங் என்பது நட்புக்கான ஒருவகை தீட்சை என்று வரைவிலக்கணம் கூறுபவர்களும் இருக்கின்றனர்.


ஆனால் அதற்கும் ஒரு எல்லை உண்டு. ஒழுங்குமுறை உண்டு. ராக்கிங்கிற்கு உட்படுகின்ற மாணவர்கள் அதனை விரும்புகிறார்களா என்பதை ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

இதை விடுத்து ராக்கிங்கை வெறுக்கின்ற மாணவர்களிடம் ராக்கிங் செய்வது மிக மோசமான செயலாகும்.

எனவே மாணவர்கள் முதலில் மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்பட வேண்டும். இதை அறிந்துகொள்ளும் பக்குவம் அவர்களிடம் இல்லையானால் அவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதனால் இந்த நாடு எந்த நன்மையையும் பெற்றுவிடமாட்டாது.

ஆக, எதிர்காலத்தில் ராக்கிங்கில் ஈடுபடுகின்ற பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பது கட்டாயமானதாகும்.

# இந்து கலாசார, சமய அலுவல்களின் இணைப்புச் செயலாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

இயு லங்கா போரம் நிறுவனத்தின் சர்வதேச தலைவரும் ஜேர்மனியின் முத்துமன் அன்ட் கோறன்புளோ சட்ட நிறுவனத்தின் சட்ட ஆலோசகரும் மாண்புமிகு ஜனாதிபதியின் புலம்பெயர்ந்த மக்களுக்கான இணைப்பாளரும் ஆலோசகருமான எம்.ரி. எஸ்.இராமச்சந்திரன் இந்து கலாசார சமய அலுவல்களின் இணைப்புச் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இந்நியமனத்தினை ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் சர்வதேச புத்த, இந்து கலாசார நிறுவனத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வண. அத்துறலியே ரத்ன தேரர் வழங்கி கௌரவித்துள்ளார்.

இதற்கான காரியாயலம் இலக்கம் 29, பழம் வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ)

# அடம்பனில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் புலிகளின் பெருந்தொகை ஆயுதங்கள் மீட்பு

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் தொடர்ச்சியாக முல்லைத்தீவு பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டுக் கொண்டிருப்பதாக விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு பிரதேசத்தின் கட்டளை மற்றும் பாதுகாப்புப் பொறுப்பை விசேட அதிரடிப்படையினர் ஏற்றது தொடக்கம் அப்பகுதியில் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனைகளின் போது பெருந்தொகையான ஆயுதங்கள் நாளுக்கு நாள் கண்டுபிடிக்கப்பட்டு வருவதாக அதிரடிப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவின் அடம்பன் பிரதேசத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது புதைக்கப்பட்டிருந்த நிலையில் விடுதலைப் புலிகளின் பெருந்தொகையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்புக்கருவிகள் 03, டிஜிட்டல் அலைவரிசையிலான தகவல் தொலைத்தொடர்புக்கருவிகள், கைக்குண்டுகள் 16, பீரங்கிக் குண்டுகள் 16, அதிசக்தி வாய்ந்த கிளேமோர் குண்டுகள் 05 என்பவற்றுடன் பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மற்றும் ஆயுதங்களுக்கான உதிரிப்பாகங்கள் என்பனவும் அடம்பனில் நடைபெற்ற சோதனை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# கமரா கண்டெடுப்பு

புகைப்படக்கருவி (கமரா) ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி வலம்புரிக்காரியாலயத்தில் அலுவலகை நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். (ஸ்ரீ-3)

# சரத் பொன்சேகாவின் செயலர் பிணையில் விடுதலை

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தேர்தல் செயலாளராக பணியாற்றிய சேனக டி சில்வா 2 லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையிலும் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பிணை வழங்கக் கோரி சேனக டி சில்வா தாக்கல் செய்த மனுவையடுத்து அவர் நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்வதற்கு கடந்த 28 ஆம் திகதி மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் பெப்பரவரி மாதம் 8 ஆம் திகதி அவர் சரத் பொன்சேகாவுடன் கைது செய்யப்பட்டிருந்தார். தப்பியோடிய இராணுவத்தினருக்கு அடைக்கலம் வழங்கியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கிரிக்கெட் போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் வடமராட்சிக்குட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 10 ஓவர் 9 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஏ பிரிவினருக்கான போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. பி பிரிவினருக்கான போட்டி எதிர்வரும் 9, 10 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-24)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



உடல் ஒவ்வொரு நிமிடமும் அழிந்து கொண்டே இருக்கிறது.மனமோ தொடர்ந்து மாறியபடி இருக்கிறது.உடல் பலவற்றின் சேர்க்கை,மனமும் அத்தகையதே,எனவே இவை எல்லா மாறுதல்களுக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைய முடியாது.ஆனால் தூலப் பொருளான அந்த மெல்லிய உறையையும்,இதற்கு அப்பாலுள்ள மனம் என்ற நுட்பமான உறையையும் தாண்டி இருக்கிறது ஆன்மா.இதுவே மனிதனது உண்மைத் தத்துவம். இது நிலையானது.என்றுமே பந்தப்படாதது.இதன் அழியாமை, சுதந்திரம் ஆகிய தன்மைகளே எண்ணம்,சடப்பொருள் போன்ற போர்வைகளை ஊடுருவி,உருவம் என்ற நிறங்களைக் கடந்து,சுதந்திரம் அழியாமை என்ற தன்மைகளை வற்புறுத்தி நிற்கிறது.

மிகவும் தடித்த அஞ்ஞானம் என்ற போர்வைகளையும் ஊடுருவி இந்த ஆன்மாவின் அழிவின்மையும்,ஆனந்தமும், அமைதியும்,தெய்வீகமும் பிரகாசித்து,நாம் இவற்றை உணரும் படி செய்கின்றன. ஆன்மாதான் உண்மை மனிதன்.அவன் பயமும் அழிவும் பந்தமும் அற்றவன்.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## வீடு திரும்பும் வீதியெங்கும் அடுத்தவனை அழப்பதற்கான ஆரவார அவதூறுமொழிகள் தவிப்போம்.(லூக்கா 18:9-14)

கோயிலுக்கு செபிக்க சென்ற நாம் ஆண்டவருக்கு ஏற்புடையவராக வீடு திரும்பவேண்டும் என்று விரும்புகின்றோம். இது எல்லோருடைய வாழ்விலும் உண்மையாக உள்ளதா? கோயிலுக்குச் சென்று, திருப்பலியிருந்து திரும்பும், அனைவரும் அருளோடு, ஆசீரோடு, அமைதியோடு கடவுளுக்கு ஏற்புடையவராக திரும்ப வேண்டும்.

ஆனால் நாம் வீடு திரும்பும் வீதியெங்கும் வசைமொழி. ஆலயத்திலேயே ஆரம்பமாகும்.அடுத்தவனை அழப்பதற்கான ஆரவாரம். செபம் என்ற பெயரில் ஆண்டவனுக்கு முகவரியற்ற, ஆண்டவனோடு புரணிப் பேச்சு, சுயவிளம்பரம். இப்ப டிப்பட்ட நாம் கடவுளுக்கு இற்புடை யவராக திரும்ப முடியுமா?. என்று எம் சிலரு க்கு செபத்தில், திருப்பலி யில் கலந்து கொள்வது என்பது நண்பர்களைச் சந்திக்கவும், பொழுது போக்கவும், போனில் பேசவும் ,அரசியல் அளக்கவும், பங்கு குருபற்றி வேண்டாத வம்பிளுக்கவும் கழிக்கும் நேரமாகியது. பின் இப்படியான நாம் எப்படி கடவுளுக்கு ஏற்புடையவர ாக திருப்ப முடியும்.

ஆண்டவன் ஆலயம் செல்கிறேன், சென்று செபிக்கவேண்டும்,செபித்து கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்ப வேண்டும். என்ற மனநிலையோடு புறப்படும்போது,உறுதியாக அப்படியே திரும்புவோம்.மாறாக,இன்று புறப்படும் போதே பளபளக்கும் பட்டுச்சேலை, விலை உயர்ந்த நகைகள், காமக்கண்கள்,கமகமக்கும் வாசனைத் தெளிப்புக்கள் வாழ்வதில்லையா? தேவையான பைபிள், செபப்புத்தகம் இவற்றை கையில் எடுப்பதே இல்லையே.எப்படி கடவுளுக்கு ஏற்புடையவராக திரும்ப முடியும்.

இக்கேள்விக்குப் பதில் அளிப்பது அவ்வளவு எளிதல்ல.ஏனென்றால் நம்மிடம்வெவ்வேறுமனநிலைகள்தெரிவதுண்டு.நான் இதைச்செய்தேன் அதைச் செய்தேன் என்று கடவுளிடம் எடுத்துக் கூறி நாம் பெருமை கொண் டாடுகிறோம். அப்போது நம்மிடையே துலங்குவது பரிசேயரிடம் தெரிந்த மனநிலைதானே. இது சரியான மன நிலையல்ல என இயேசு தெளிவுபடுத்துகிறார். இதற்கு நேர்மாறானது. வரிதண்டுபவரின் மன நிலை. அவருடைய தொழில் மக்களால் இகழப்பட்ட ஒன்று. ஏன்,பல மக்கள் வரிதண்டுவோரை மனதார வெறுத்தனர்.ஆனால் இந்த மனிதர் கடவுளிடம் சென்று தாம் குற்றம்

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

செய்வதை ஏற்கிறார்.பிறரை வஞ்சித்ததை ஒத்துக் கொள்கிறார்.அதுமட்டும் அல்ல. பிறரி டம் இருந்துதிருடிய பணத்தை கொடுப்பதாக வாக்களிக்கிறார். அவரு டையவாழ்க்கையில்ஒரு ஆழ்ந்த மாற்றம் ஏற்படுகிறது.கடவுளிடம் இருந்து அவர் மன்னிப்புக் கோருகிறார். கடவு ளும் அவருடைய மன்றாட்டை ஏற்றுக் கொண்டு அவரை தமக்கு ஏற்புடைய வராக்குகிறார். நம்மிடம் இந்த மன நிலை துலங்கச் செய்வோம்.

உ

மீனாட்சி அம்மன் துணை

"மறக்கவே முடியாமல் தேடுகின்றோம் உங்களையே"

அமரர் திருமதி. இராசமணி வீரசிங்கம் அவர்களின் மறக்க முடியாத

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் ...

பெண் வடிவாக
14
10
1933

இறைவடிவாக
04
03
2011



கடந்த 04.03.2011 அன்று இறைபதம் எய்திய எமது அன்னையாராகிய திருமதி.இராசமணி வீரசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்றைய தினம் அன்னாரது நாவலர் வீதி இல்லத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.


198/5 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
021-2222435

குடும்பத்தினர்

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011



மும்பையில் இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் உலகக்கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்புடன் பயிற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய வீரர்கள்.

## கிரிக்கெட் ஜாம்பவான்கள் என்ன சொல்கிறார்கள்

இந்திய- இலங்கை இறுதிப் போட்டியில் வெல்வது யார் என்ற உலகக் கிண்ணம் வென்ற அணித்தலைவர்களின் கருத்து இதோ.

**கிளைவ் லொய்ட் (மேற்கிந்தியத் தீவுகள்)**

நான் அடிக்கடி கூறுவதைப்போல பிடியெடுத்தால் ஆட்டத்தில் வெற்றி பெறலாம். பாகிஸ்தான் பிடியைத் தவறவிட்டதால் தோல்வியடைந்தது. இறுதிப்போட்டியில் இந்தியாவுக்கு வாய்ப்பு அதிகம்.

**கபில்தேப் (இந்தியா)**

ஒரு இந்தியனாக இந்தியாதான் உலகக் கிண்ணத்தை வெல்லும் என்று சொல்லுவேன். கிரிக்கெட் வீரராகப் பார்க்கும்போது இந்தியாவுக்குத் தான் வாய்ப்பு அதிகம். ஆனால் ஒரே அணியாக விளையாடும் இலங்கை மிகவும் அபாயகரமான அணி.

**அலன் போர்டர் (அவுஸ்திரேலியா)**

என்னைப் பொறுத்தவரை இந்தியாவைத் தோற்கடித்து இலங்கை அதிர்ச்சியளிக்கும் என நினைக்கிறேன். அவர்களிடம் சிறப்பான சுழல் பந்துவீச்சு உள்ளது.

**இம்ரான் கான் (பாகிஸ்தான்)**

பாகிஸ்தான் போட்டியில் வென்றபின் இந்தியா தன்னம்பிக்கை அதிகரித்திருக்கிறது. இந்தியாவுக்குத்தான் வாய்ப்பு. ஆனால் இலங்கை கடுமையாகப் போராடும்.

**ரணதுங்க (இலங்கை)**

இலங்கையின் நடுக்கள வீரர்கள்தான் எனக்குப் பிரச்சினையாகத் தெரிகின்றனர். ஜெயவர்த்தன ஆட்டம் சரியில்லை. ஆனாலும் என் இதயம் இலங்கை வெற்றிபெறும் என்றே சொல்கிறது.

**ரிக்கி பொன்டிங் (அவுஸ்திரேலியா)**

இம்முறை உலகக் கிண்ணம் இந்தியாவுக்குத்தான். அவர்களை வெல்வது கடினம். ஆனால் இலங்கை கடுமையான போட்டியைக் கொடுக்கும்.

## இறுதிப் போட்டிக்கு ரூ.4,500கோடி சூதாட்டம்



(மும்பை)

உலகக் கிண்ண கிரிக்கெட்டின் இறுதிப் போட்டியில் யார் வெல்வது என்பது குறித்து ரூ.4ஆயிரத்து 500 கோடி வரைக்கும் சூதாட்டம் நடக்கவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று மும் பையில் நடக்கிறது. இதில் இந்தியா, இலங்கை அணிகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டியில் மட்டும் நேற்று மாலைவரை ரூ.4ஆயிரத்து 500 கோடி சூதாட்டம் நடக்கவுள்ளது. தவிர போட்டியின் முடிபு மட்டுமல்லாது விக்கெட், ஓவர் ஒவ்வொரு பந்திற்கும் சூதாட்டம் நடக்கவிருப்பதாக சூதாட்ட முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார். சச்சின் சதம் அடிப்பது தொடர்பாகவும் சூதாட்டம் நடந்துள்ளது.

## எனது வாழ்க்கையின் முக்கிய ஆட்டம் இன்று

### முரளிதரன் தெரிவிப்பு



உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெறும் இறுதிப் போட்டி தனது வாழ்க்கையின் மிக முக்கியமான ஆட்டம் எனத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திரச் சுழற் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் இப் போட்டியில்தான் விளையாடவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்தியாவுடனான உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் காயங்கள் காரணமாக முரளிதரன் விளையாடுவாரா என்பது சந்தேகத்திற்கிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தான் இப்போட்டியில் விளையாடவுள்ளதாக நேற்று டுவிட்டர் மூலம் முரளிதரன் அறிவித்துள்ளார்.

முரளிதரன் இப் போட்டியில் விளையாடுவாரா என்பது குறித்து நிலவிய சந்தேகங்கள் இதன்மூலம் முடிபுக்கு வந்துள்ளன.

## பலிக்குமா 'எம்' மந்திரம்

(மும்பை)

இந்திய அணிக்கு இம்முறை எம் மந்திரம் கைகொடுக்கிறது. அதாவது ஆங்கில எழுத்தான எம் என்று ஆரம்பமாகும் இடங்கள் அல்லது மைதானங்களில் நடந்த போட்டிகளில் வென்றுள்ளது.

உதாரணமாக, மிர்புர் (எதிர் பங்களாதேஷ்), எம்.ஏ.சின்னசாமி அரங் கம் (எதிர் அயர்லாந்து), எம்.ஏ.சிதம்பரம் (எதிர் மேற்கிந்தியத்தீவுகள்), மொதிர (எதிர் அவுஸ்திரேலியா), மொகாலி (எதிர் பாகிஸ்தான்) ஆகிய இடங்களில் வெற்றிவாகை சூடியுள்ளது.

இறுதிப் போட்டி நடக்கவுள்ள மும் பையின் பெயரும் எம் என்ற எழுத்தில் தான் ஆரம்பமாகிறது. இதனால் இந்திய அணி உலகக் கிண்ணம் வெல்ல வாய்ப்பு உள்ளது.

தவிர மகேந்திர சிங் தோனி என்ற பெயரும் எம் என்ற எழுத்தில்தான் ஆரம்பமாகிறது. இம்முறை பங்கேற்றுள்ள அணித்தலைவர்களில் இவரது பெயர் மட்டுமே எம் என்ற எழுத்ததில் ஆரம்பமாகிறது.

## உலகக் கிண்ண அரங்கில்

இந்தியா- இலங்கை கிரிக்கெட் அணிகள் இதுவரை 128 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளன. இதில் இந்திய அணி 67 போட்டிகளிலும் இலங்கை அணி 50 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன. 11 ஆட்டங்களில் முடிபில்லை.

ஒருநாள் அரங்கில் இந்தியா முன்னணியிலிருந்தாலும் உலகக் கிண்ண அரங்கில் இலங்கை அணியின் ஆதிக்கம் தான் மேலோங்கியிருக்கிறது.

உலகக் கிண்ண அரங்கில் இந்திய-இலங்கை அணிகள் இதுவரை 7 முறைநேருக்கு நேர் சந்தித்துள்ளன. இதில் 4 முறை இலங்கை அணியும் 2 முறை இந்திய அணியும் வெற்றி கண்டுள்ளன. ஒரு ஆட்டத்தில் முடிபில்லை.

இதன் விபரங்கள் வருமாறு,

1979 ஜுன் 18; இங்கிலாந்தில் நடந்த உலகக் கிண்ண லீக் சுற்றில் இலங்கை அணி 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை தோற்கடித்தது.

1992 பெப்ரவரி 28; அவுஸ்திரேலியாவில் நடந்த இந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய-இலங்கை அணிகள் மோதிய லீக் ஆட்டம் மழை காரணமாக வெறும் 2 பந்துகள் மட்டும் வீசப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது.

1996 மார்ச் 13; இந்த உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 251 ஓட்டங்களை எடுத்தது. அரவிந்த டி சில்வா அதிரடியாக 66 ஓட்டங்கள் எடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு டெண்டுல்கர் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுடன் விக்கெட்டுக்கள் சரித்தன.

தோல்வியின் பாதைக்கு தள்ளப்பட்டது. இந்திய அணி 34.1 ஓவர்களில் 120 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்து தத்தளித்த போது, இரசிகர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். அரங்கின் ஒரு பகுதியை தீவைத்து எரித்தனர்.

இதனையடுத்து ஆட்டம் அத்துடன் நிறுத்தப்பட்டு இலங்கை அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

1999 மே 26; இலங்கை அணியை உலகக் கிண்ண அரங்கில் இந்திய அணி வெற்றி கொண்ட முதல் ஆட்டம் இது. இங்கிலாந்தின் டவுன்டானில் நடந்த இந்த லீக் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 6 விக்கெட்டுக்களையிழந்து 373ஓட்டங்கள் குவித்தது.

இதில் சௌரவ் கங்குலி 158 பந்துகளில் (17 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் உட்பட) 183 ஓட்டங்களையும் டிராவிட் 145 ஓட்டங்களையும் எடுத்து 02 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 318 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

உலகக் கிண்ண அரங்கில் விக்கெட் ஒன்றிற்கான அதிகபட்ச இணைப்பாட்டமாக இந்த சாதனை இன்று வரை நீடிக்கிறது.

| வெற்றியில் | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| ஒருநாள் போட்டியில் | 50 | 67 |
| இந்தியாவில் | 11 | 28 |
| உலகக் கிண்ணத்தில் | 04 | 02 |
| மும்பை வான்கடே மைதானத்தில் | 01 | 01 |

2003 மார்ச் 10; ஜோகனஸ்பேர்க்கில் நடந்த இந்த சூப்பர் 6 சுற்றில் முதல் ஆடிய இந்திய அணி 6 விக்கெட்டுக்களையிழந்து 292 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 23 ஓவர்களில் 109 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து தோல்வியடைந்தது.

2007 மார்ச் 23; மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த வாழ்வா? சாவா? லீக்போட்டியில் 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இலங்கை அணி, இந்திய அணியை தொடரிலிருந்து வெளியேற்றியது.

# புலிகளின் ஆயுதப்பரம்பலை...

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பு மற்றும் ஆயுதக் கொள்வனவு என்பவற்றை முறியடிப்பதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேசக் செயற்பாடுகள் 2006ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே தொடங்கப்பட்டது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை முடிபுக்குவந்து யுத்தம் தொடங்கப்பட்ட காலப் பகுதியிலேயே அமெரிக்கா இத்திட்டத்தை முன்னின்று தொடங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் சட்டவிரோதமாக நிதி சேகரிப்பு மற்றும் சட்டவிரோத ஆயுதக் கொள்வனவை ஆகியவற்றை தடுக்கும் முகமாக இரண்டு சர்வதேச தொடர்பாடல் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்த திட்டத்திற்கு இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளதுடன் இந்த தொடர்பாடல் குழுக்களின் செயற்பாடுகளுக்கு இந்தியாவையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என இலங்கை அமெரிக்காவிற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

ஸ்தம்பித்துப்போன சமாதானச் செயற்பாடுகள் விடயத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பது என்பதில் அமெரிக்கா இருக்கின்ற பக்கத்திலேயே இந்தியாவும் இருப்தாக அமெரிக்கா நம்பியது.

இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளை அரசாங்கம் புறக்கணிக்கின்றது என்ற விடுதலைப் புலிகளின் பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் தீர்வினை முன்வைக்கச் செய்து விடுதலைப் புலிகளின் ஆயுத மற்றும் பண பலத்தை முறியடிப்பது என அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி.ஜே.லண்ஸ்டட் 2006 மே 3ல் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ள கேபிளில் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த செய்தி அனுப்பப்பட்டு எட்டு தினங்களின் பின்னர்தான் விடுதலைப் புலிகள் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது தற்கொலை தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அதே வருடம் ஜூன் மாதத்துக்குப்பின் அனுப்பப்பட்டுள்ள தகவல்களின்படி இந்தக் குழுக்கள் பற்றி இந்தியா மகிழ்ச்சியாகக் காணப்பட்டது.

இந்த சர்வதேசத் திட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள இந்தியா மீது அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு இலங்கை கோரியுள்ளது.

இந்தத் தொடர்பாடல் குழுக்களின் விபரம் மற்றும் அதன் சேர்க்கை பற்றி முதற்தடவையாக 2006 ஆகஸ்ட் 21ல் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து அனுப்பப்பட்டுள்ள கேபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான்,மலேஷியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், சுவிட்ஸர்லாந்து, தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இந்தக் குழுக்கள் அமைந்துள்ளன என அதில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

# லிபியாவுக்கு ஆதரவாக...

பாட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரான விமல் வீரவன்ச மற்றும் முஸ்லிம் அமைப்புகள் என்பன ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்த நிலையில் நேற்று இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தன தலைமையில் ஆர்பாட்டமொன்று இடம்பெற்றது.

லிபியா மீதான மேற்குலகின் தாக்குதல்களுக்கு எதிராக நேற்று மாளிகாவத்தை ஜும்மா பள்ளிவாசல் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றிகு அழைப்பு விடுக்கப்பட்டது. இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டமானது ஜும்மா தொழுகையின் பின்னர் நடைபெற்றதுடன் நூற்றுக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிரான சுலோகங்களையும் தாங்கியிருந்ததுடன் அமெரிக்காவிற்கும் கூட்டுப்படைகளுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதேவேளை லிபியா மீதான தாக்குதல்களுக்கு எதிராகவும் அதனைக் கண்டித்தும் மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேச முஸ்லிம்களும் இன்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஈழத்தமிழர் பிரச்சினை...

கணிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இலங்கை தமிழர்கள் தொடர்பில் போதிய செயற்பாட்டை முன்னெடுக்காமை, தமிழக மீனவர்கள் இலங்கை கடற் பரப்பில் சந்தித்த அசாதாரண நிலைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காமை போன்ற காரணங்களுக்காக தமிழக மக்கள் கருணநிதியை இந்த முறை எதிர்ப்பர் என சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் சட்ட ஒழுங்கு சீர்குலைவு, அமைச்சர்கள்-அதிகாரிகளின் ஊழல் போன்ற காரணங்களுக்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தமிழக மக்களுக்கு நம்பிக்கை இல்லாது போயுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களின் பிரச்சினையை முறையாக கையாள தமிழக அரசாங்கம் தவறிவிட்டது என இந்த கருத்துக் கணிப்பில் கலந்து கொண்ட 41 சதவீதமான மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இலங்கை தமிழர்களுக்காக போதிய அளவில் கருணாநிதி செயற்பட்டுள்ளார் என 25 சதவீத மானவர்கள் வாக்களித்துள்ளனர்.

எவ்வாறாயினும் இலங்கை தமிழர் விவகாரம் தமிழக அரசியலில் செல்வாக்கு செலுத்தாது என அண்மையில் த ரைம்ஸ் ஒப் இந்தியா சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சாவ.வாரிவானேஸ்...

காரணமாக அவை அவ் ஆலய திருக்குளத்தில் போடப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இது உண்மையா என்பதை அறியும் நோக்கில் கடந்தவாரம் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர் மதியழகன் மற்றும் தொல்லியல், வரலாறு மாணவர்களுடன் இணைந்து அத்திருக்குளத்தில் மேற்கொண்ட ஆய்வின் போது பன்னிரண்டு இந்து விக்கிரகங்களை மீட்க முடிந்தது.

கருங்கல்லால் வடிவமைக்கப்பட்ட அவ் விக்கிரகங்கள் அனைத்திலும் உடைவுகள் காணப்படுவதால் ஆகம விதிக்கு ஏற்ப இவ் விக்கிரகங்கள் ஆலயத்திருக்குளத்தில் போடப்பட்டுள்ளதென்பது தெரிகிறது.

இங்கு கிடைத்த விக்கிரகங்களுள் முருகன், வள்ளி, சூரியன், சந்திரன், நந்தி என்பன சிறந்த தொழில் நுட்பத்துடன் செதுக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. இவற்றை ஆய்வு செய்த தமிழகத் தொல்லியலாளரான பேராசிரியர் இராசவேலு, கலாநிதி ராஜகோபால், சிறிதரன் போன்றோர் பழமைவாய்ந்த இவ்விக்கிரகங்கள் இலங்கைநாட்டுசிற்பிகளால் வடிவமைக்கப்பட்ட சுதேச கலை மரபுக்குரியதென குறிப்பிடுகின்றனர்.

கோயில் முகாமையாளர் கூறுவது போல் இவ் விக்கிரகங்கள் சாவகச்சேரி நீதிமன்ற சுற்றாடலில் கிடைத்தவையாக இருப்பின் இங்கு சிவன் ஆலயத்துடன் முருகன் ஆலயமும் முன்பொரு காலத்தில் இருந்திருக்கலாம் என கருத இடம் உண்டு. இதையே திருக்குளத்தில் கிடைத்த முருகன் ஆலயத்துக்குரிய விக்கிரகங்கள் உறுதி செய்கின்றன. அதை எதிர்கால ஆய்வுகள் தான் உறுதி செய்ய வேண்டும். (ச-5)


## விற்பனைக்கு

மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கிணற்றுக் கற்கள், கொங்கிறீற் தூண்கள், வேலித் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்காரக் கற்கள் மற்றும் கட்டட மூலப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- பாலா என்ரபிறைசஸ்
554, கண்டி வீதி, அரியாலை.
(ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் அருகில்)
T.P 0214922804 (4222)


# யுத்த வெற்றி போன்...

தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளது.

ஐதேகவின்சார்பில்அதிருப்திகொறடா ஜோன் அமரதுங்க இலங்கை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்றதைப் போல் இம்முறையும் அதை வெல்வதற்கான ஆற்றலை இலங்கை அணி கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# முன்னாள் போராளிகள்...

நகர மண்டபத்தில் நடைபெற்ற இது தொடர்பான வைபவத்தில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பி.டபிள்யூ கொடிப்பிலி, அமைச்சின் ஆலோ சகர் சதீஸ்குமார், புனர்வாழ்வுஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க மற்றும் இராணுவ உயபர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வன்னியில் இடம்பெற்ற மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு மீண்டும் அவர்களை சமூகத்துடன் இணைக்கும் அரசாங்கத்தின் செயற்றிட்டத்தின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சி திட்டம் நடைபெற்றதாக பிரிகேடியர் ரணசிங்க தெரிவித்தார். விடுதலையானவர்களுடைய நடன நிகழ்வும் இடம்பெற்றது. (ச-5)


## அலுவலர் தேவை

A/L சித்தி அல்லது பட்டமுடன் அலுவலக உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் தேவை.
இன்று/நாளை நேரில் வரவும்

MyWay English
182, ஸ்ரான்லி ரோட் (முதல் மாடி)
யாழ்ப்பாணம். 077 33 63 456

MyWay யின் அதிபர், ஆசிரியர்
அலுவலர்களுக்கான சனி ஞாயிறு
3 மாத பயிற்சிநெறி

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : 3 மாதம் கட்டணம் : 8000/-

2ஆம் 3ஆம் திகதிகளில் பயிற்சியில் சேருவோருக்கு சலுகை கட்டணம் ரூபா 3000/- மட்டும்

MyWay 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 222 95 05 Mobile : 077 33 63 456

MyWay யின்
Complete English

Volume 1 - Spoken English
Volume 2 - Grammar With CD/DVD
Volume 3 - Fluency Development

தனியாரும் பெற்றுக்கொள்ளலாம்
விலை ரூபா 1500/- மட்டும்

MyWay 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 222 95 05 Mobile : 077 33 63 456

## ESOL Diploma in English City & Guilds

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும். பலவருடங்களாக University of Cambridge இன் KET, PET, FCE போன்ற பரீட்சைகளிலும் City & Guilds Diploma in English பரீட்சைகளிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

University of Cambridge யின் KET (A2)ESOL பரீட்சை எதிர்வரும் 04th of June இல் British Council Colombo இல் நடைபெறும். பரீட்சை எடுக்க விருப்பமானவர்கள் எமது கல்லூரியில் வந்து 08.04.2011 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும். பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள் 04.04.2011 இல் ஆரம்பமாகி 01.06.2011 வரை நடைபெறும்.



Why City & Guilds English Qualifications?

- Recogized by UK Universities and UK Border Agency
- Directly Linked to the Common European Framework
- Certificate for LIfetime

City & Guilds English is offered at 6 different levels.
A1, A2, B1, B2 , C1, C2
GET an International Qualification for Your Language Competence.
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே 02 மாதங்களில் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 2 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 8.30.11.30 a.m |
| Commencement | 04.04.2011 | 09.04.2011 |

Registration : Rs 500/= Course Fee :100 /= per hour

வகுப்புகள் 04.04.2011 ஆரம்பம்

BRITISH COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல. 3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.